TEACHER'S CARE PUBLICATION
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

# 2025-2026

# PG TRB

## G.O No. 219 New Syllabus

# HISTORY

(Tamil Medium)



## UNIT-1 (Volume-1)

## HISTORY OF INDIA UPTO 10th CENTURY A.D.

*Your Success is Our Goal...*

**SERVICES AVAILABLE FOR PG TRB EXAM**

- Material for All 10 Units
- E-Book for Psychology & Education Methodology
- E-Book for GK
- Online Recorded Video Classes
- Online Test
- Question Bank
- Regular Classes

tcaexamguide

Teacher's Care Academy

www.tcaexamguide.com

tcaexamguide@gmail.com

# வரலாறு

## கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரையிலான இந்திய வரலாறு

## (History of India upto 10th Century A.D.)

# PG TRB (2025-2026)

## அலகு - 1

### (தொகுதி - 1)

### FIRST EDITION

**TEACHER'S CARE PUBLICATION**

**38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502**

**Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080**

**Branch Office : 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy (76399 67359)**

**Branch Office: Advaitha Ashram Road, New Bus Stand, Salem (93602 68118)**

# VOLUME – I

## கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரையிலான இந்திய வரலாறு

## (History of India upto 10th Century A.D.)


| CONTENT | P.N. |
|---|---|
| PG TRB PREVIOUS YEAR QUESTIONS – 2022 | i |
| PG TRB PREVIOUS YEAR QUESTIONS – 2019 | ii |
| PG TRB PREVIOUS YEAR QUESTIONS – 2017 | iii |
| PG TRB PREVIOUS YEAR QUESTIONS – 2015 | v |
| PG TRB PREVIOUS YEAR QUESTIONS – 2012 | vii |
| | |
| பண்டைய வரலாற்றை அறிய உதவும் நூல்கள் மற்றும் அதன் ஆசிரியர்கள் | 1 |
| 1.1. இந்திய வரலாற்றின் ஆதாரங்கள் (Sources of Indian History) | 2 |
| 1.1.1. தொல்லியல் (Archaeological) | 3 |
| 1.1.2. இலக்கியங்கள் (Literary) | 13 |
| 1.1.3. அயல்நாட்டு தூதர்கள், பயணிகளின் குறிப்புகள் (Foreign Accounts) | 16 |
| 1.1.4. புவியியல் அமைப்புகள் ஓர் அறிமுகம் (கூடுதல் தகவல் களஞ்சியம்) | 24 |
| 1.2. வரலாற்றுக்கு முந்தைய காலம் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆரம்ப கால வரலாறு (Pre and Proto History) | 34 |
| மாதிரி வினாக்கள் | 48 |
| 1.2.1. ஹாரப்பா நாகரீகம் (Harappan Civilization) | 55 |
| மாதிரி வினாக்கள் | 88 |
| 1.2.2. வேத காலம் (Vedic Age) | 100 |
| 1.2.2.1. ஆரம்ப வேத காலம் (Early Vedic Age) | 100 |
| 1.2.2.2. பிந்தைய வேத காலம் (Later Vedic Age) | 127 |
| மாதிரி வினாக்கள் | 150 |
| 1.3. மாநிலங்களின் உருவாக்கம் (Formation of State) | 155 |
| 1.3.1. நகரமயமாக்கல் (Urbanization) | 155 |
| 1.3.2. மஹாஜன பதங்கள் (Mahajanapadas) | 159 |
| மாதிரி வினாக்கள் | 166 |
| 1.4. சமணமும் (ஜைனமும்) பௌத்தமும் | 171 |

| | |
|---|---|
| 1.4.1. சமணம்/ஜைனம் (Jainism) | 176 |
| 1.4.2.. பௌத்தம்/புத்தம் (Buddhism) | 189 |
| மாதிரி வினாக்கள் | 210 |
| 1.5. மகதத்தின் எழுச்சி (Rise of Magadha) | 224 |
| 1.6. அலெக்சாண்டரின் படையெடுப்பு மற்றும் அதன் தாக்கம் (Alexander's Invasion and its impact) | 229 |
| 1.7. மௌரியப் பேரரசு (Mauryan Empire) | 239 |
| 1.7.1. சந்திர குப்த மௌரியர் (Chandra Gupta Maurya) | 242 |
| 1.7.2. பிந்துசாரர் (Bindusara) | 243 |
| 1.7.3. அசோகர் (Ashoka) | 245 |
| 1.7.4. மௌரிய நிர்வாகம் (Mauryan Administration) | 283 |
| மாதிரி வினாக்கள் | 304 |
| முக்கிய வினாக்களின் பெட்டகம் (200 MCQ) | 317 |

## PG TRB PREVIOUS YEAR QUESTIONS - 2022

**1. சமண மதத் தீர்த்தங்கரர்களில் முதன்மையானவர்**

(A) மகாவீர் (B) பார்ஷ்வா (C) அஜித்நாத் (D) ரிஷபநாத்

**2. சமண மத அஹிம்சாவின் தோற்றுவாய் எனக் குறிப்பிட்டவர்**

(A) பால கங்காதர திலகர் (B) M.G. ரானடே

(C) கோபால கிருஷ்ண கோகலே (D) ராஜாராம் மோகன்ராய்

95665 35080

**3. முதல் புத்த மாநாட்டை கூட்டியவர்.**

(A) ருத்திரசேனா (B) பிம்பிசாரா (C) அஜாதசத்ரு (D) கல்ஹணர்

**4. 1921 – ம் ஆண்டு மாண்ட்கோமரி நகரை கண்டுபிடித்தவரின் பெயரைக் குறிப்பிடுக.**

(A) S.R. ராவ் (B) J.P. ஜோஷி (C) N.G. மஜிம்தார் (D) தயாராம் சஹானி

**5.“பர்யுஷானா” திருவிழா ………. சமயத்துடன் தொடர்புடையது.**

(A) புத்த மதம் (B) சமண மதம் (C) இந்து மதம் (D) இஸ்லாம் மதம்

**6. பின்வருவனவற்றுள் வேத கால மக்கள் அறிந்திருந்த உலோகங்கள் எவை?**

(A) தாமிரம், இரும்பு, தங்கம், வெள்ளி (B) டின், வெண்கலம்

(C) காரீயம், வெண்கலம் (D) வெள்ளி, டின்

**7. ஒரு மருத்துவர் சுஸ்ருதாவின் ஆசிரியர்**

(A) சரகர் (B) ஆர்யபட்டர் (C) போதயானா (D) தன்வந்தரி

**8. அசோகரை புத்த சமயத்திற்கு அறிமுகப்படுத்திய புத்தமத ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுக**

(A) உப குப்தர் (B) புரு குப்தர் (C) ஸ்கந்த குப்தர் (D) ராம குப்தர்

**9. கிரேக்கர்களுக்கு எதிரான சந்திரகுப்த மௌரியரின் படையெடுப்பு பற்றிய தகவல்களை பின்குறிப்பிட்ட எந்த இலக்கிய சான்று கொண்டுள்ளது?**

(A) மகாவம்சம் (B) முத்ராராக் ஷசம் (C) தீபவம்சம் (D) அர்த்தசாஸ்திரம்

**10. மௌரியப் பேரரசின் நிர்வாக சபை ……. என அழைக்கப்படுகிறது**

(A) அமத்தியர்கள் (B) மகாமத்திரர்கள் (C) மந்திரி - பரிஷத் (D) அத்யக்சர்கள்

**11. நான்கு சிங்கங்கள் பின்புறமாக ஒன்றாக அமர்ந்து நான்கு வெவ்வேறு திசைகளை பார்க்கும்படியான விலங்க சிற்பம் மௌரியர் ஆட்சியில் எங்கு கண்டறியப்பட்டது?**

(A) ராமபுரா மற்றும் சங்கிஸா (B) சாஞ்சி மற்றும் சாரநாத்

(C) பகிரா மற்றும் பராபர் (D) பராகட் மற்றும் புத்தகயா

TCA

# PG TRB HISTORY PREVIOUS YEAR SOLVED QUESTION PAPER

**2022 (12-02-2022 FN) & 2022 (12-02-2022 AN)**


**2019 (29-09-2019 FN)**

**2017 & 2015**

**ஆகியவற்றின் விடைகள் மற்றும் விரிவான விளக்கங்களை புத்தக வடிவில் பெற்றுக் கொள்ள தொடர்புக் கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்:**

**95665 35080; 97862 69980;**

**93602 68118; 76399 67359**



# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**

**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy: 76399 67359 Salem: 93602 68118**


# PG TRB – HISTORY (வரலாறு)

## அலகு - 1 (தொகுதி - 1)

கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரையிலான இந்திய வரலாறு

(History of India upto 10th Century A.D.)

### பண்டைய வரலாற்றிய அறிய உதவும் நூல்கள் மற்றும் அதன் ஆசிரியர்கள்

1) இந்திய வரலாறு (பகுதி 2) – கி.ர.அனுமந்தன் & ந.க.மங்களமுருகேசன்
2) இந்தியாவின் சிறப்பு வரலாறு (பகுதி 1) – R.C.மஜூம்தார், H.C.ராய்சௌதுரி, K. தத்தா
3) இந்திய வரலாறு (ஹர்ஷர் முதல் கி.பி.1206 வரை) பாகம் 2 – இர.ஆலாலசுந்தரம்
4) இந்திய வரலாறு (கி.பி.1200 வரை) – K.சத்தியநாதய்யார் & D.பாலசுப்பிரமணியம்
5) இந்தியக் கலை வரலாறு (இரண்டாம் புத்தகம்) – பேரா.புலவர்.கோ.தங்கவேலு
6) தென்னிந்திய வரலாறு (கி.பி.900 முதல் கி.பி.1565 வரை) – டாக்டர்.அ.கிருஷ்ணசாமி
7) தென்னிந்திய வரலாறு (வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் விஜயநகர பேரரசின் வீழ்ச்சி காலம் வரை) – முதல் பகுதி – கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி
8) தென்னிந்தியாவைப்பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள் (மெகஸ்தனிஸ் முதல் ஹூவான் வரை) – கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி
9) பண்டைக்கால நாகரீகங்களின் வரலாறு – டாக்டர் கி.ர.அநுமந்தன்
10) பண்டைய இந்திய அரசியல் ஆட்சி நிலையங்கள் – டாக்டர் ந.சுப்ரமணியன்
11) பழங்கால இந்தியாவில் அரசியல் சிந்தனையும் ஆட்சிமுறையும் – ம.பரதன்
12) வட இந்திய வரலாறு (ஹர்ஷரது மரணம் முதல் கி.பி.1208 வரை) – இர.ஆலாலசுந்தரம்

13) The Oxford History of India (Part 1) – Vincent A.Smith

14) A History of Ancient and Early Medieval India: From the Stone Age to the 12th Century – Upinder Singh

15) History of medieval india - R S Sharma Bipin Chandra

16) India – A History – John Keay

17) A History of India, Vol. 1: From Origins to 1300 - Romila Thapar

18) India's Ancient Past – R.S.Sharma

19) The Vedic age (Up to 600 B.C) - Volume 1 - R.C. Majumdar

20) The Classical age(320–750 A.D) - Volume 3 - R.C. Majumdar


## 1.1. இந்திய வரலாற்றின் ஆதாரங்கள் (Sources of Indian History)

| தொல்லியல் ஆதாரங்கள் | இலக்கிய ஆதாரங்கள் |
| --- | --- |
| 1) நாணயங்கள் | 1) மதச்சார்பற்ற இலக்கியம்<br>➢ இதிகாசங்கள் (ம) பாடல்கள்<br>➢ வெளிநாட்டு பயணிகளின் குறிப்புகள்<br>➢ இந்திய ஆசிரியர்களின் நூல்கள்<br>➢ நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் |
| 2) கல்வெட்டுகள்<br>➢ பாறைக்கல்வெட்டுகள்<br>➢ கோயில் சுவர் கல்வெட்டுகள்<br>➢ உலோகத்தூண்கள் | |
| 3) நினைவுச் சின்னங்கள்<br>➢ அரண்மனைகள்<br>➢ கோட்டை<br>➢ கோயில்கள்<br>➢ ஸ்தூபி<br>➢ மடங்கள் | 2) மதச்சார்புள்ள இலக்கியம்<br>➢ இதிகாசங்கள்<br>▪ ராமாயணம்<br>▪ மகாபாரதம்<br>▪ மணிமேகலை<br>➢ பக்தி இலக்கியம்<br>▪ தேவாரம்<br>▪ நாலாயிர திவ்யபிரபந்தம்<br>▪ திருவாசகம் |
| 4) தொல்லியல் பொருட்கள்<br>➢ சிலைகள்<br>➢ பானைகள்<br>➢ பொம்மைகள்<br>➢ கருவிகள்<br>➢ அணிகலன்கள் | |

95665 35080

## 1.1.1. தொல்லியல் (Archaeological)

### தொல்பொருள் ஆதாரங்கள்

1. தொல்வகை திறன் பொருள்கள், 2. நாணயங்கள், 3. கல்வெட்டுகள், 4. நினைவு சின்னங்கள்

### 1. தொல்வகை திறன் பொருட்கள்

1. பானைகள், 2. பொம்மைகள், 3. கருவிகள், 4. அணிகலன்கள்

TCA

### 2. நாணயங்கள்

- பல்வேறு காலங்களில் மன்னர்கள் தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றார்போல் நாணயத்தை வெளியிட்டார்கள்.

**நாணயமுறை:-**

- இந்தோ - கிரேக்க ஆட்சியாளர்கள் அச்சு வார்க்கும் முறையை அறிமுகம் செய்து நேர்த்தியான வடிவங்களில் நாணயங்களை வெளியிட்டனர்.
- நாணயத்தில் எழுத்துக்களும் உருவங்களுக்கும் பொறிக்கப்பட்டன. இம்முறையை இந்தியர்கள் இவர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர்.

### நாணயங்கள்:-

- இராணுவப் படையெடுப்புகள் பிரதேச விரிவாக்கம், வணிகத் தொடர்புகள், சமய நம்பிக்கைகள் போன்றவையும் நாணயங்களில் இடம் பெற்றுள்ளன.
- முகமதுகோரி தான் வெளியிட்ட தங்க நாணயத்தில் பெண் தெய்வமான இலட்சுமியின் வடிவத்தைப் பதிப்பித்துத் தனது பெயரையும் பொறிக்கச் செய்திருந்தார்.
- இந்நாணயம், இந்தத் தொடக்ககாலத் துருக்கியப் படையெடுப்பாளர் மதவியங்களின் தாராளத்தன்மையுடன் நடந்து கொண்டார் என்பதற்கான அனைத்துச் சாத்தியக் கூறுகளையும் உணர்த்துகிறது.
- டெல்லி சுல்தான்களின் காலகட்டத்தை அறிந்து கொள்ள ஜிட்டல் என்னும் செப்பு நாணயங்கள் பயன்படுகின்றன.
- இல்துமிஷ் அறிமுகம் செய்த **"டங்கா"** எனப்படும் வெள்ளி நாணயங்கள், அலாவுதீன் கில்ஜியின் தங்க நாணயங்கள், முகமதுபின் துக்ளக்கின் செப்பு நாணயங்கள் போன்றவை நாணயங்கள் பரவலான பயன்பாட்டில் இருந்தன.
- நாட்டின் பொருளாதார வளம் அல்லது நலிவு ஆகியவற்றைச் சுட்டுவதாகவும் அமைந்துள்ளன.
- ஒரு ஜிட்டல் 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டதாகும் 48 ஜிட்டல்கள்
  1 வெள்ளி டங்காவுக்குச் சமமாகும்.

## நாணயவியல் (Numismatics)

- இதுவரை அகழ்வாராய்வில் கண்டெடுக்கப்பட்ட **மிகப்பழமையான இந்திய காசுகள் வெள்ளி** உலோகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளதாக அமைந்துள்ளன.
- **சர் வால்டர் எலியட்** என்பவரால், தமிழ்நாட்டில் முறையான காசு ஆய்வு 1886 இல் தொடங்கி வைக்கப்பட்டது.
- **அச்சு காசுகள்** தொழில்நுட்பத்தை இந்தியாவில் முதன்முதலில் புகுத்தியவர்கள் **இந்திய-பாக்தீரியர்கள்** எனும் வம்சத்தை சேர்ந்த அரசர்களாவர்.
- **காசுகள்/நாணயங்கள்** என்னும் புத்தகத்தின் ஆசிரியர் - **பர்மேஷ்வரி லால் குப்தா**
- **'பழங்கால இந்தியாவின் காசுகள் பட்டியல்'** எனும் நூலை எழுதியவர் - **ஜான் ஆலன்**.
- **லக்குண்டி** எனுமிடத்தில் **கல்யாணி சாளுக்கியர்களின் நாணய சாலை** அமைந்திருந்தது.
- முத்திரை காசுகளின் தொழில்நுட்பம் சுமார் 1000 ஆண்டுகளுக்குப் பின்னர் **கடம்பர்களால்** மீண்டும் தென்னிந்தியாவில் கொண்டுவரப்பட்டது.
- கிரேக்க கடவுள்களை பிரபலப்படுத்த இந்தோ-கிரேக்க மன்னர்கள் ஆர்வம் காட்டியதன் காரணமாக, **இந்தோ-கிரேக்க காசுகளில் கிரேக்க கடவுள் உருவங்கள்** பெருமளவில் பொறிக்கப்பட்டன.
- **குஷான** அரசர்களின் தெய்வத்தன்மை **மேகங்களிலிருந்து உதிக்கிற** விதமாக வெளியிடப்பட்ட காசு மூலம் அறிய முடிகிறது.
- முத்திரைக் காசுகள் வருவதற்கு முன்னரே **தமிழ்நாட்டில் பழமையான குளிகை காசுகள்** புழக்கத்தில் இருந்தன.

TCA

- நாணயவியல் புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள்:
  - **எலியட் (Elliot)** - காய்ன்ஸ் ஆப் சதர்ன் இந்தியா (Coins of Southern India)
  - **டஃப்னெல் (Tuffnell)** - ஹிண்ட்ஸ் டு காய்ன் கலெக்ஷ்ன் இன் சவுத் இந்தியா (Hints to Coin Collection in South India)
  - **லோவன்தல் (Loventhal)** – காய்ன்ஸ் ஆப் தின்னவேலி (The coins of Tinnevelly)
  - **கோசாம்பி (Kosambi)** - இண்டியன் நியூமிஸ்மேடிக்ஸ் (Indian Numismatics)

**சமுத்திர குப்தரின் நாணயங்கள்**

| யாக குண்டத்தின் முன்புறம் நிற்பது | கருடக்கொடி |
| --- | --- |
|  |  |

| | |
|---|---|
| லக்ஷ்மி தேவி சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பது<br> | புலியின் மீது அமர்ந்து வேட்டையாடுவது<br> |
| வீணை வாசிப்பது<br> | அஸ்வமேத யாகம் (குதிரை நிற்பது)<br> |
| குப்த பேரரசின் இளவரசி<br> | வில்வீரர் வகை<br><br> |
| தலைகவசத்துடன் கையில் கோடாரி வகை<br> | |

## இரண்டாம் சந்திர குப்தரின் நாணயங்கள் (உருவங்கள்)

| | |
|---|---|
| சக்ரவிக்கிரம வகை (வைஷ்ணவர்) | குடை வகை (குடையின் கீழ் குள்ளமான நபர் குடையை தாங்கி நிற்பது) |
| கருடனின் உருவம் (பிறைச்சந்திரன் வடிவ வகை) | குடைவகை (தங்க நாணயம்) யாகம் செய்வது |
| ஆசனத்தில் அமர்ந்திருக்கும் வகை<br> | குதிரை வீரர் வகை (குதிரையில் அமர்ந்த நிலையில்)<br> |

| | |
|---|---|
| சிங்கத்தை வீழ்த்தும் வகை  | கருடனின் உருவம் (ஏராளமான வெள்ளி நாணயங்கள்)  |
| தலைகவசத்துடன் கையில் கோடாரி வகை  | வில்வீரர் வகை  |
| பூச்சாடி வகை (Flower Pots type) – மலர்களோடு கூடிய பூச்சாடி வகை | |

## குமார குப்தரின் நாணயங்கள்

| | |
|---|---|
| குடை வகை | |
| வில்வீரர் வகை (கையில் வில் மற்றும் அம்புடன்)  | வாள் வீரர் வகை  |
| லக்ஷ்மி தேவி தாமரையில் (அமர்ந்தபடி)  | அஸ்வமேத யாக வகை (குதிரை ஓடுவது)  |
| சிங்கத்தை வெல்லும் வீரர்  | புலியை வீழ்த்தும் வீரர்  |

| | |
|---|---|
| **யானை மேல் சவாரி செய்யும் வகை**  | **யானைமேல் சவாரி செய்து சிங்கத்தை கொல்வது**  |
| **காண்டாமிருக வேட்டை வகை**  | **வீணை வாசிப்பது (அரசி அருகில் அமர்ந்து இருத்தல் வகை)**  |
| **ம யில் வகை (முருகபெருமான் மயில் உடன் அமர்ந்த நிலை – கார்த்திகேய நாணய வகை)**  | **ப்ரதாப வகை (அரசர் அரசிகளுடன் அமர்ந்த நிலை)**  |
| **குதிரை வீரர் வகை (குதிரையில் அரசர் அமர்ந்திருப்பது)**   | |

## 3. கல்வெட்டுகள்

1. பாறை கல்வெட்டுகள்,
2. கோயில் சுவர் கல்வெட்டுகள்,
3. உலோக தூண்

TCA

**கல்வெட்டு ஆதாரங்கள்**

- **மார்டிமர் வீலர்** தென்னிந்திய தொல்லியலில் ஒரு **நிலையான காலக்கணிப்பு** ஏற்படுத்தியவர் எனும் பெருமை பெற்றார்.

- **மன்சல் சாய்ஸ் வண்ண சார்ட்** உதவியுடன் மண் மற்றும் **மட்பாண்டங்களின் வண்ணங்களை** அறிந்து கொள்ள முடிகிறது.
- இந்திய தொல்லியல் துறையில் **முதலாவது இந்திய டைரக்டர் ஜெனரல் - தயா ராம் சாஹ்னி**
- **அலெக்சாண்டர் கன்னிங்ஹாம்** எனும் தொல்லியலாளரால், **தட்சசீலம், கௌசாம்பி** போன்ற புத்த சமய இடங்கள் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.
- "அகழாய்வு செய்தல், கண்டுபிடித்தல், வகைப்படுத்துதல் மீண்டும் உருவாக்குதல், விளக்குதல், படியெடுத்தல், கண்டுணர்தல் போற்றுதல் ஆகியவை நமது தலையாய கடமை" – இந்த கூற்றினைக் கூறியவர் **கர்சன் பிரபு**
- **தெர்மோ லூமினஸன்ஸ், சுட்ட களிமண்** பொருட்களை காலக்கணிப்பு செய்வதற்கு ஏற்ற **காலக்கணிப்பு** முறையாக விளங்குகிறது.
- ஒரு மட்டத்தில் காணப்படும் எல்லா பொருட்களும் கட்டிடங்களும் ஒரே காலத்தியவை. இக்கூற்றை குறை விமர்சனம் செய்தவர் - **R.E.M. வீலர்**
- **1940** ஆம் ஆண்டில் **V.D. கிருஷ்ணசாமியின்** கள ஆய்வில் அன்றைய செங்கல்பட்டு மாவட்டத்தில் **200 க்கும் மேற்பட்ட** பல்வேறு **பெருங்கல் ஈமச்சின்னங்கள்** கண்டுபிடிக்கப்பட்டன.
- **கார்பன்-14 மற்றும் டென்ட்ரோகார்பன் முறையும் உதவுகிறது.**
- **புளோடேஷன் டெக்னிக்** என்பது **பூஞ்செடி எச்சங்கள்** உடன் இணைந்ததாகும்.
- இரும்பு காலத்தில் உள்ளூரிலேயே இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்று **நைகுந்த்** எனுமிடத்தில் கிடைத்துள்ளது
- தொல்லியலாளர்களும் அவர்கள் கண்டுபிடித்தவைகளும்:
  - **U.S. மூர்த்தி**- தென்னிந்தியாவின் பெருங்கற் சின்னம் பண்பாடு
  - **F.R. அல்ச்சின் -** உத்தூர் அகழாய்வு
  - **M. கெனோயர்** - ஹரப்பா பண்பாடு
  - **M.L.K. மூர்த்தி** - கர்நூல் குகை

TEACHER'S CARE ACADEMY
KANCHIPURAM
95665 35080

- **காவிரிப்பூம்பட்டினத்தார்** வாழ்ந்த **தொன்மை ரோமனியர்களின் குடியிருப்பு** பகுதியின் உள்ளூர் பெயராக **வெள்ளையன் இருப்பு** அழைக்கப்பட்டது.
- பெருமளவு கற்கருவிகளையும் சிறிதளவு செம்பு கருவிகளையும் **அஹார் பண்பாடு நீங்கலாக** செம்பு-கற்கருவி பண்பாட்டு மக்கள் பயன்படுத்தினர்.
- கடைப்பழங்காற்காலத்தில் **பிளேடு** போன்ற சில்லினால் செய்யப்பட்ட **உளி** போன்ற '**பியூரின்**' என்னும் **கற்கருவி** பயன்படுத்தப்பட்டது.
- நுண்கற்கருவிகள் கிடைத்துள்ள '**தேரி**' எனப்படும் மணற்குன்றுகள் காணப்படும் பகுதி **தூத்துக்குடி** மாவட்டத்தில் அமைந்துள்ளது.

- இந்தியாவின் சிவாலிக் தொடரில் 10 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்த **காண்டாமிருகத்தின்** புதை வடிவம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- மேல் மண்ணடுக்குகளில் பழங்கற்கால கருவிகளை சிவாலிக் கொண்டுள்ளது
- **R.B.பூட்** இந்தியாவின் முதலாவது பழங்கற்காலத்திய கைக்கோடாரியினைக் கண்டுபிடித்தார்.
- ஆதாரங்களின் முக்கியத்துவத்தை கருதி பொ.ஆ. 8ம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.16ம் நூற்றாண்டு வரையிலான காலத்தை **கல்வெட்டுகள் காலம்** என்று அழைப்பர்
- எழுத்து முறை அல்லது எழுத்துகளின் அறிவியல் (The Science of Letters) தொல் எழுத்துக்கலை எனப்படுகிறது.

## 4. நினைவு சின்னங்கள்:

**1. அரண்மனைகள், 2. கோட்டைகள், 3. கோயில்கள், 4. ஸ்தூபிகள்**

TCA

## தொல்லியல் (Archeology)

## கல்வெட்டு ஆதாரங்கள் (Inscription)

- நமக்கு கிடைத்திருக்கும் கல்வெட்டுகளில் பழமையானது அசோகரின் கல்வெட்டுகள் (கி.மு. 3ஆம் நூற்றாண்டு)
- அசோகரின் கல்வெட்டுகளை முதன் முதலில் படித்தவர் **ஜேம்ஸ் பிரின்செப் 1837** ஆம் ஆண்டு படித்தார்
- கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட முதல் கல்வெட்டு **ஜீனாகாத் கல்வெட்டு** 20 வரிகள் – ருத்ரதாமன் வெளியிட்டது.
- முதல் கல்வெட்டு கலைஞர் அசோகர் ஆவார்.
- அலகாபாத் தூண் கல்வெட்டு சமுத்திரகுப்தரின் வரலாற்றை கூறும் கல்வெட்டு இது அரிசேனர் **அவர்களால் 33 வரிகளைக்** கொண்டது ஆகும். (குப்தர் காலத்தை சார்ந்தவை)
- குவாலியர் கல்வெட்டு (7 வரிகளில்) போஜராஜன் வரலாற்றைக் கூறுகின்றன.
- ஐயோலே கல்வெட்டு இரண்டாம் புலிகேசியின் வெற்றியைப் பற்றி (19 வரிகளை) கொண்டு கூறுகிறது.
- காரவேலின் ஹதிகும்பா கல்வெட்டு (17 வரிகளை உடையது)
- (உதயகிரிமலை-புவனேஷ்வர்) ரும்மிண்டி கல்வெட்டு அசோகர் புத்தர் பிறப்பிடமாகிய ரும்மிணி தோட்டத்தை வணங்கியதை அறிகிறோம் (1896-அலோபிஸ் அன்ஃபூரார்.
- **பெஸ் நகர கருடத்தூண் கல்வெட்டு** – ஹெலியோடோரஸ்
- **பிடாரி தூண் கல்வெட்டு** – ஸ்கந்த குப்தர்
- **ஜீனாகத் கல்வெட்டு** – ஸ்கந்த குப்தர்

- பெருங்கற்காலம் ஆங்கிலத்தில் **Megalithic Age** என்று அழைக்கப்படுகிறது. **Megalith** என்பது கிரேக்கச் சொல்லாகும்.
- **'Mega'** என்றால் **பெரிய, Lith** என்றால் **'கல்'** என்று பொருள். இறந்தவர்களைப் புதைத்த இடங்களைக் கற்பலகைகளைக் கொண்டு மூடியதால் இக்காலம் பெருங்கற்காலம் என அழைக்கப்படுகிறது.

**வரலாற்றுக்கு முந்திய காலம் மற்றும் இந்தியாவின் ஆரம்பகால நாகரிகங்கள்**

- பழங்காலம் எனப்படும் வரலாற்றில் மிகவும் தொன்மையான காலம் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது.

1. கீழ்ப்பழங்கற்காலம் (Lower palaeolithic) கி.மு 2மி - கி.மு. 60000
2. இடைப் பழங்கற்காலம் (Middle palaeolithic) கி.மு. 3,85,000 – 40,000
3. மேல் பழங்கற்காலம் (Upper palaeolithic) கி.மு. 40,000 -10,000

TEACHER'S CARE ACADEMY TCA KANCHIPURAM
95665 35080

**கீழ்ப்பழங்கற்காலம்**

**அச்சூலின் மரபும் சோகனியன் மரபும்:**

- இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பழங்கற்கால மக்களின் தொடக்க காலப் பண்பாடு அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகளின் அடிப்படையில் இரு மரபுகளாக பிரிக்கப்படுகிறது.
- **கைக்கோடாரி வகைக் கருவிகளைக்** கொண்ட மரபு **அச்சூலியன் (Achelulian)** என்றும் **கூழாங்கல்லைச் செதுக்கி உருவாக்கப்படும் கருவிகளைக்** கொண்ட மரபு **சோகனியன் (sohanian)** என்றும் அழைக்கப்படுகிறது.
- அச்சூலியன் மரபு பெருமளவில் கோடரிகளையும் வெட்டுக்கத்திகளையும் கொண்டது. சோகனிய மரபு துண்டாக்கும் கருவிகளையும் அதைச் சார்ந்த வேலைகளுக்கான கருவிகளையும் மட்டுமே கொண்டது.
- இன்றைய பாகிஸ்தானில் உள்ள சோகன் ஆற்றின் வடிநீர்ப்பகுதியில் நிலவிய மரபு என்பதால், இது சோகனிய மரபுப் எனப்படுகிறது.
- அண்மையில் நடைபெற்ற ஆய்வுகளின்போது இதே பகுதியில் அச்சூலியன் மரபு சார்ந்த கருவிகளும் கிடைத்தன. எனவே தனித்தன்மை வாய்ந்த சோகனிய மரபு என்ற ஒன்று இருந்ததாகக் கூற இயலாது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

- **ஹோமோ ஹெபிலிஸ், ஹோமோ எரக்டஸ்** ஆகிய மனித மூதாதையர்களின் பண்பாடு **கீழ்ப்பழங்கற்காலப் பண்பாடு** என்று குறிப்பிடுகிறது.
- **அச்சூலியன்** (கைக்கோடாரி வகை), **சோகனியன்** (கூழாங்கல் கருவி) இருமுகக் கருவி போன்றவை இக்கால கற்கருவிகள்.


- இந்தியாவில் அச்சூலியன் கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள **அதிரம்பாக்கம். பல்லாவரம் குடியம்,** கர்நாடகாவின் **ஹன்ஸ்கி** சமவெளியில் உள்ள **இசம்பூர்,** மத்தியப்பிரதேசத்தில் உள்ள **பிம்பேட்கா** ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.
- தற்போது இந்தியாவில் இருக்கும் ஒரே புதை படிவம் **ஹோசாங்காபாத்** (மத்திய பிரதேசம்) அருகே உள்ள **ஹத்னோராவில்** கண்டுபிடிக்கப்பட்ட ஹோமினியன் மனிதன் மண்டையோட்டின் மேல்பகுதி இதை **'நர்மதை மனிதன்'** என்றும் **ஹோமோ செப்பியன்ஸ்** இனத்தின் அடையாளம் என்றும் கூறுகின்றனர்.
    - **எக்கஸ்** - குதிரை, கழுதை, வரிக்குதிரை
    - **எலிபஸ் நமடிகஸ்** - ஸ்டோகோடோன் கணேசா (பெரிய யானை) யானை
    - **போஸ் நமடிகஸ்** - காட்டுப் மாடுகள்



ஹத்னோரா ஆர்க்கைக் ஹோமோ சேப்பியன்ஸ் புதைபடிவம் – மண்டையோட்டின் மேல்பகுதி




எலிபஸ் நமடிகஸ்




போஸ் நமடிகஸ்

### இடைப் பழங்கற்காலம்

- **H.D.சங்கிலியா** என்பவர் இடைப்பழங்கற்காலத்தை **நெவாசா** என்னுமிடத்தில் **பிரவாரா** ஆற்றங்கரையில் முதன் முதலாக அடையாளம் கண்டார்.
- **நியாண்டர்தால் மக்கள்** இனம் இக்காலத்தை சேர்ந்தவை
- **லெவாய்சியன் கருவிகள்** மற்றும் **செர்ட், ஜாஸ்பர், கால்சிடெனி குவார்ட்ஸ்** ஆகிய கற்களை பயன்படுத்தினர்.
- இடைப்பழங்கற்கால நாகரீகம் **நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, யமுனா** உள்ளிட்ட ஆறுகளின் சமவெளிகளில் காணப்படுகிறது.

TCA

### மேல்பழங்கற்காலம்

- **"பியூரின்"** என்ற கூரிய வெட்டுகளை உள்ள கல்லாலான **உளி, எலும்பு** மற்றும் கற்களாலான வாள் போல வெட்டுவாய் கொண்டவையாகவும் அமைந்திருந்தன.
- மனிதப் பரிணாம வளர்ச்சியால் தோன்றிய முதல் நவீன மனிதர்கள் முதன் முதலில் **சப்-சஹாரர்** எனப்படும் ஆப்ரிக்காவின் **சஹாராவிற்கு தெற்கு** பகுதியில் தோன்றினர்.

TEACHER'S CARE PUBLICATION
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080


**2025-2026**

# PG TRB

**G.O No. 219** **New Syllabus**

# HISTORY

*(Tamil Medium)*



**UNIT-1 (Volume-2)**

**HISTORY OF INDIA UPTO 10th CENTURY A.D.**

*Your Success is Our Goal...*

**SERVICES AVAILABLE FOR PG TRB EXAM**

- Material for All 10 Units
- E-Book for Psychology & Education Methodology
- E-Book for GK
- Online Recorded Video Classes
- Online Test
- Question Bank
- Regular Classes

tcaexamguide

Teacher's Care Academy

www.tcaexamguide.com

tcaexamguide@gmail.com

# வரலாறு

## கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரையிலான இந்திய வரலாறு

## (History of India upto 10th Century A.D.)

# PG TRB (2025-2026)

## அலகு - 1

**(தொகுதி – 2)**

## FIRST EDITION

**TEACHER'S CARE PUBLICATION**

**38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502**

**Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080**

**Branch Office : 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy (76399 67359)**

**Branch Office: Advaitha Ashram Road, New Bus Stand, Salem (93602 68118)**

# VOLUME – II

## கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரையிலான இந்திய வரலாறு

## (History of India upto 10th Century A.D.)


| CONTENT | P.N. |
|---|---|
| PG TRB PREVIOUS YEAR QUESTIONS – 2022 | i |
| PG TRB PREVIOUS YEAR QUESTIONS – 2019 | ii |
| PG TRB PREVIOUS YEAR QUESTIONS – 2017 | iii |
| PG TRB PREVIOUS YEAR QUESTIONS – 2015 | v |
| PG TRB PREVIOUS YEAR QUESTIONS – 2012 | vii |
| 1.8. சுங்கர்கள் (Sungas) | 1 |
| 1.9. சாதவாகனர்கள் (Satavahanas) | 2 |
| மாதிரி வினாக்கள் | 16 |
| 1.10. இந்தோ-கிரேக்கம் (Indo-Greeks) | 20 |
| 1.10.1. சாகர்கள் (Sakas) | 26 |
| 1.10.2. பார்த்தியார்கள் (Parthians) | 28 |
| 1.11. குஷானர்கள் (Kushans) | 32 |
| 1.11.1. கனிஷ்கர் (Kanishka) | 42 |
| 1.11.2. காந்தாரக் கலை (Gandhara Art) | 43 |
| 1.12. குபதர்களின் காலம் (Age of Guptas) | 51 |
| 1.12. முதலாம் சந்திர குப்தர் (Chandra Gupta I) | 55 |
| 1.12.2. சமுத்திர குப்தர் (Samudra Gupta) | 58 |
| 1.12.3. இரண்டாம் சந்திர குப்தர் (Chandra Gupta II) | 67 |
| 1.12.4. குப்தர்களின் நிர்வாகம் (Administration) | 71 |
| 1.12.5. கலை மற்றும் கட்டிடக்கலை (Art and Architecture) | 85 |
| 1.12.6. இலக்கியம் (Literature) மற்றும் கல்வி (Education) | 93 |
| 1.12.7. நாளந்தா (Nalanda) | 99 |
| 1.12.8. விக்ரமசீலா (Vikramasila) | 102 |

| | |
|---|---|
| 1.12.9. வல்லபி (Valabhi) | 103 |
| 1.12.10. ஹூணர்களின் படையெடுப்பு (Invasion of Huns) | 104 |
| 1.13. வர்தனர்களின் வம்சம் (Vardhana Dynasty) | 114 |
| 1.13.1. ஹர்ஷ வர்தனர் (Harsha Vardhana) | 116 |
| 1.13.2. ஹூவான் சாங்கின் குறிப்புகள் (Hieun-Tsang's Account) | 124 |
| 1.14. சாளுக்கியர்கள் (Chalukyas) | 125 |
| 1.15. முடிசூட்டப்பட்ட மூன்று இராஜ்யங்கள் (Three Crowned Kingdom) | 130 |
| 1.15.1. பிரதிஹாரர்கள் (Prathihara) | 130 |
| 1.15.2. பாலர்கள் (Palas) | 150 |
| 1.15.3. ராஷ்ட்ரகூடர்கள் (Rashtrakutas) | 168 |
| 1.16. இரண்டாவது மேற்கு/மேலை சாளுக்கியர்கள் (Second Western Chalukyas) | 174 |
| மாதிரி வினாக்கள - 2 | 187 |
| முக்கிய வினாக்களின் பெட்டகம் (150 MCQ) | 211 |

**1. சமண மதத் தீர்த்தங்கரர்களில் முதன்மையானவர்**

(A) மகாவீர் (B) பார்ஷ்வா (C) அஜித்நாத் (D) ரிஷபநாத்

**2. சமண மத அஹிம்சாவின் தோற்றுவாய் எனக் குறிப்பிட்டவர்**

(A) பால கங்காதர திலகர் (B) M.G. ரானடே

(C) கோபால கிருஷ்ண கோகலே (D) ராஜாராம் மோகன்ராய்

TEACHER'S CARE ACADEMY KANCHIPURAM
95665 35080

**3. முதல் புத்த மாநாட்டை கூட்டியவர்.**

(A) ருத்திரசேனா (B) பிம்பிசாரா (C) அஜாதசத்ரு (D) கல்ஹணர்

**4. 1921 – ம் ஆண்டு மாண்ட்கோமரி நகரை கண்டுபிடித்தவரின் பெயரைக் குறிப்பிடுக.**

(A) S.R. ராவ் (B) J.P. ஜோஷி (C) N.G. மஜிம்தார் (D) தயாராம் சஹானி

**5."பர்யுஷானா" திருவிழா ………. சமயத்துடன் தொடர்புடையது.**

(A) புத்த மதம் (B) சமண மதம் (C) இந்து மதம் (D) இஸ்லாம் மதம்

**6. பின்வருவனவற்றுள் வேத கால மக்கள் அறிந்திருந்த உலோகங்கள் எவை?**

(A) தாமிரம், இரும்பு, தங்கம், வெள்ளி (B) டின், வெண்கலம்

(C) காரீயம், வெண்கலம் (D) வெள்ளி, டின்

**7. ஒரு மருத்துவர் சுஸ்ருதாவின் ஆசிரியர்**

(A) சரகர் (B) ஆர்யபட்டர் (C) போதயானா (D) தன்வந்தரி

**8. அசோகரை புத்த சமயத்திற்கு அறிமுகப்படுத்திய புத்தமத ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுக**

(A) உப குப்தர் (B) புரு குப்தர் (C) ஸ்கந்த குப்தர் (D) ராம குப்தர்

**9. கிரேக்கர்களுக்கு எதிரான சந்திரகுப்த மௌரியரின் படையெடுப்பு பற்றிய தகவல்களை பின்குறிப்பிட்ட எந்த இலக்கிய சான்று கொண்டுள்ளது?**

(A) மகாவம்சம் (B) முத்ராராக் ஷசம் (C) தீபவம்சம் (D) அர்த்தசாஸ்திரம்

**10. மௌரியப் பேரரசின் நிர்வாக சபை ……. என அழைக்கப்படுகிறது**

(A) அமத்தியர்கள் (B) மகாமத்திரர்கள் (C) மந்திரி - பரிஷத் (D) அத்யக்சர்கள்

**11. நான்கு சிங்கங்கள் பின்புறமாக ஒன்றாக அமர்ந்து நான்கு வெவ்வேறு திசைகளை பார்க்கும்படியான விலங்க சிற்பம் மௌரியர் ஆட்சியில் எங்கு கண்டறியப்பட்டது?**

(A) ராமபுரா மற்றும் சங்கிஸா (B) சாஞ்சி மற்றும் சாரநாத்

(C) பகிரா மற்றும் பராபர் (D) பராகட் மற்றும் புத்தகயா

TCA

## PG TRB HISTORY PREVIOUS YEAR SOLVED QUESTION PAPER

**2022 (12-02-2022 FN) & 2022 (12-02-2022 AN)**


**2019 (29-09-2019 FN)**

**2017 & 2015**

**ஆகியவற்றின் விடைகள் மற்றும் விரிவான விளக்கங்களை புத்தக வடிவில் பெற்றுக் கொள்ள தொடர்புக் கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்:**

**95665 35080; 97862 69980;**

**93602 68118; 76399 67359**



**TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM**
**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**
**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**
**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**
**Trichy: 76399 67359 Salem: 93602 68118**

# PG TRB – HISTORY (வரலாறு)

## அலகு - 1 (பகுதி - 2)

கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரையிலான இந்திய வரலாறு
(HISTORY OF INDIA UPTO 10TH CENTURY A.D.)

## 1.8. சுங்கர்கள் (SUNGAS)

### நினைவில் நிறுத்தவும்

- **புஷ்யமித்திரர்** சுங்க வம்சத்தை நிறுவி **பாடலிபுத்திரத்தைத்** தனது தலைநகராக்கினார்.
- **பாக்டீரிய** அரசர் **மினான்டரின்** படையெடுப்பை புஷ்யமித்திரர் வெற்றிகரமாக முறியடித்தார். ஆனால் மினான்டர், காபூலையும் சிந்துவையும் தன் கைவசம் வைத்துக் கொண்டார்.
- **கலிங்க அரசர் காரவேலரின்** தாக்குதலையும் புஷ்யமித்திர்ர் முறியடித்தார். பிறகு விதர்பாவையும் கைப்பற்றினார்.
- புஷ்யமித்திரர் வேத மதத்தை பின்பற்றினார். பேரரசை நிலைநாட்ட இருமுறை **அஸ்வமேத** யாகம் செய்தார்.
- புஷ்யமித்திர சுங்கருக்குப் பின்னர் அவருடைய மகன் **அக்னிமித்ரா** அரச பதவி ஏற்றார்.
- காளிதாசர் இயற்றிய **மாளவிகாக்னிமித்ரா** நாடகத்தின் கதாநாயகன் எனக் கருதப்படுகிறார். மேலும் அந்நாடகம் அக்னிமித்ரா மகன் **வசுமித்ரர் கிரேக்கர்களை சிந்து** நதிக்கரையில் வெற்றி கொண்டதாக குறிப்பிடுகின்றது.
- சமஸ்கிருத மொழியின் இரண்டாவது இலக்கண அறிஞரான **பதஞ்சலியைப்** புஷ்யமித்ரா ஆதரித்தார்.
- **பர்கூத், சாஞ்சி** ஆகிய இடங்களிலுள்ள பௌத்த ஸ்தூபிகளில் காணப்படுவது போல ஸ்தூபிகளின் சுற்றுச் சுவர்களிலும் வாயில்களிலும் கற்களுக்குப் பதிலாக மரத்தைப் பயன்படுத்தும் முறை சுங்கர் காலத்தில் நடைமுறைக்கு வந்தது

- சுங்க வம்சத்தின் பின்வந்த அரசர்கள் வலிமை குன்றியவர்களாக இருந்ததால் இந்தோ – பாக்டீரியர், இந்தோ – பார்த்தியர் ஆகியோரின் தொடர் அச்சுறுத்தல்களை சந்திக்க நேர்ந்தது.
- சுங்க வம்சத்தின் நூறு ஆண்டு காலம் ஆட்சி புரிந்தனர் **தேவபூதி** கடைசி சுங்க அரசராவார். அவர் தன்னிடம் அமைச்சராக பணிபுரிந்த **வாசுதேவகன்வர்** என்பவரால் கொல்லப்பட்டார். **வாசுதேவர் மகத்தில் கன்வ வம்சத்தை நிறுவினார்.**

**கன்வர்கள்**

TCA

- **கன்வ வம்சம் 4 அரசர்களை** மட்டுமே கொண்டது. அவர்கள் 45 ஆண்டுகள் ஆட்சி செய்தனர்.
    - ✓ **கன்வ** அரசர்கள் - வாசுதேவர், பூமிமித்ரர், நாராயணர், சுசர்மன்
- கடைசிக் கன்வ அரசனான **சுசர்மன்** ஆந்திராவைச் சேர்ந்த வலிமையான குறுநில மன்னரான **“சிமுகா”** என்பவரால் கொல்லப்பட்டார். **சிமுகா** சாதவாகன வம்ச ஆட்சிக்கு அடிக்கலை நாட்டினார்.

## 1.9. சாதவாகனர்கள் (SATAVAHANAS)


- வட இந்தியாவில் 300 ஆண்டுகள் குஷாணர்களும், முதன் தென்னிந்தியாவில் 450 ஆண்டுகள் சாதவாகனர்களும் (ஆந்திர்) கோலோச்சினர்.
- **சிமுகா** இவ்வம்சத்தை தோற்றுவித்து **23 ஆண்டுகள்** ஆட்சி செய்தார்.
- **சிமுகா** – வைத் தொடர்ந்து அவருடைய சகோதரர் **“கிருஷ்ணர் பதவி”** ஏற்றார்.
- கிருஷ்ணரும் அவருடைய சகோதரியின் மகன் சதகாணியும் 10 ஆண்டுகள் வீதம் ஆட்சி புரிந்தனர். இவர்கள் காலத்தில் சாதவாகன அரசு பேரரசானது.
- சாதவாகன அரச குடும்பத்தின் மாபெரும் மன்னர் **கௌதமிபுத்திர சதகர்னியாவார்.** இவரது **அன்னை கௌதமி பாலஹீயால்** வெளியிடப்பட்ட **நாசிக் மெய்க்கீர்த்தியில்** (பிரசஸ்தியில்) இவர் சாகர், யவணர் (கிரேக்கர்). பகலவர் (பார்த்தியர்) ஆகியோரை அழித்தார் என கூறப்பட்டுள்ளது.
- **கப்பலின்** வடிவம் பொறிக்கப்பட்டுள்ள இவருடைய நாணயங்கள் ஆந்திரர்கள் கடல்சார் நிறுவன நடவடிக்கைகளில் பெற்றிருந்த திறன்களையும் அவர்களது கப்பற்படை வலிமை.

**சாதவாகனர்களின் பங்களிப்பு – இலக்கியம், கலைகள்**

- **சாதவாகன அரசர் ஹலா ஒரு சிறந்த சமஸ்கிருத அறிஞர்** கி.மு. 2 ஆம் நூற்றாண்டில், தக்காணப் பகுதிகளில் கண்டரா மொழிப்பள்ளியைச் சார்ந்த சமஸ்கிருதம் செழித்தோங்கியது.
- பிராகிருத மொழியில் 700 பாடல்களைக் கொண்ட **“சட்டசாய்”** (**சப்தசமி**) எனும் நூலை எழுதியதன் மூலம் **“ஹாலா”** புகழ் பெற்றிருந்தார்.

- அமராவதி ஸ்தூபிகளை முதன்முதலில் கண்டெடுத்தவர் **“கர்னல் காலின் மெக்கன்சி” (1798).**
- சாதவாகனர்கள் அமரவாதி ஸ்தூபிகளைக் கட்டினர் வியட்நாமில் ஓக்யோ எனும் இடத்தில் புத்தரின் வெண்கலைச்சிலையை போல் அமராவதி ஸ்தூபி உள்ளது.
- சாதவாகன அரசர்கள் 2 பாய்மரங்களை கொண்ட கப்பல்களின் சின்னம் பொறிக்கப்பட்ட ஈய அல்லது செப்பு நாணயங்களை வெளியிட்டனர்.

TCA



## இந்தோ – கிரேக்க அரசர்கள்

- இரண்டாம் **டெமட்ரியஸ் கி.மு. 175 ல் முதல் இந்தோ – கிரேக்க அரசரானார்**. இவரது நாணயம் ஒருபக்கம் அரசரையும், அவரது பெயரையும் தாங்கி இருந்தன.
- இந்தோ – கிரேக்க அரசர்களிலே நன்கறியப்பட்டவர் **"மினான்டர்"** ஆவார். இவர் காரவேலரின் கலிங்கத்தை வீழ்த்தியதாக **ஹதிகும்பா கல்வெட்டு** கூறுகிறது.
- **மிலிந்த பன்ஹா** எனும் நூல் மிணான்டர் "பௌத்தம் பற்றிய நாகசேனரிடம் கேள்வி – பதில் விவாதத்தை நடத்தியதை உறுதி செய்கிறது.
- மிணான்டரின் தூதர் **"ஹிலியோடோர்ஸ்"** ஆவார். இவரே பாகுபத்ர அரசில் ஒரு **கருட தூணை** நிறுவியவர்.

### சாகர்கள்

- இந்தியாவின் முதல் சாக அரசன் – **"மௌஸ் (அ) மொகா"**
- இவரை தொடர்ந்து ஆட்சிக்கு வந்த **"அஸி"** அரச்சை விரிவுபடுத்தினார்.
- சாகர்கள் தங்கள் ஆட்சி பகுதியை நிர்வகிக்க **சத்ரப்கள்** என்ற மாகாண ஆளுநர்களை நியமித்தனர். சத்ரப்கள் தங்களுக்கு **மகாசத்ரபாக்கள்** என பட்டம் சூட்டிக் கொண்டதோடு சுதந்திர அரசர்களாயினர்.
- சாக வம்சத்தின் முக்கியமான அரசர் **"ருத்ரதாமன்"** ஆவார். இவருடைய **"ஜினாகத் பாறைக் கல்வெட்டு"** (அ) (கிர்நர்) தூய **சமஸ்கிருத்ததில் எழுதப்பட்ட முதல் கல்வெட்டு** ஆகும்.

## சாதவாகனர்கள் (ஆந்திரர்கள்)

- **மௌரியர் வீழ்ச்சிக்குப் பின்னர் தென்னிந்தியாவில் வலிமை மிக்க அரசைத் தோற்றுவித்தவர்கள் சாதவாகனர்கள் ஆவர். சுமார் 450 ஆண்டுகள் அவர்களது ஆட்சி நீடித்தது. இவர்கள் ஆந்திரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். புராணங்களும், கல்வெட்டுக்களும் சாதவாகனர்களைப் பற்றி அறிய சான்றுகளாக உள்ளன.**

**சிமுகா — சாதவாகன வம்சத்தை தோற்றுவித்தவர் "சிமுகா" ஆவார்.**

### ஸ்ரீசதகர்ணி

- **மூன்றாவது அரசரான இவர் மேற்கு மாளவத்தையும் பீரார் பகுதியையும் கைப்பற்றினார். பின்னர் அஸ்வமேத யாகம் செய்தார்.**

### ஹாலா

- **சாதவாகன வம்சத்தில் 17வது அரசரான இவர் "சத்தசாய்" என்றழைக்கப்படும் "கத சப்த சாய்" என்ற நூலை எழுதினார்.**
- **இதில் பிராகிருத மொழியில் 700 பாடல்கள் உள்ளன.**

### கௌதமி புத்ர சதகர்ணி

- **இவர் சாதவாகன வம்சத்தின் மிகச்சிறந்த அரசர் ஆவார்.**
- **இவரது ஆட்சி பற்றி நாசிக் மற்றும் ஜுனாகாத் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.**

95665 35080

### **வசிஷ்டபுத்ர புலமாயி**

- **கௌதமிபுத்ர சதகர்ணிக்குப் பிறகு அவரது மகன் வசிஷ்ட புத்ர புலமாயி ஆட்சிக்கு வந்தார்.**
- **இவர் வெளியிட்ட நாணயங்களில் கப்பல் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.**
- **இவர் அமராவதி ஸ்தூபியை செப்பனிட்டார்.**

TEACHER'S CARE ACADEMY TCA KANCHIPURAM
95665 35080

### **யக்ஞஸ்ரீ சதகர்ணி**

- **சாதவாகன வம்சத்தின் கடைசி அரசராவார்.**

### **சாதவாகனர் ஆட்சியின் சிறப்புக்கள்**

- **கர்ஷபணம் என்ற வெள்ளி நாணயங்கள் வர்த்தகத்திற்கு பயன்படுத்தப்பட்டன.**
- **அயல்நாட்டு வர்த்தகம் சிறப்பாக இருந்தது. தக்காணத்தில் இருந்த பல்வேறு துறைமுகங்கள் குறித்து டாலமி குறிப்பிட்டுள்ளார்.**
- **மேற்கு தக்காணத்திலிருந்த "கல்யாண்" மிகப்பெரிய துறைமுகமாகும். கிழக்கிலிருந்த கண்டக சேலா, கஞ்சம் என்ற துறைமுகங்களும் சிறப்பு வாய்ந்தவை.**
- **சாதவாகனர்கள் பிராமண சமயத்தையும் புத்த சமயத்தையும் ஆதரித்தனர்.**
- **நாகார்ஜுன் கொண்டாவிலுள்ள இவர்களது கட்டிடக் குறிப்பிடத்தக்கது.**

TCA

### சாதவாகனர் காலம்

#### அரசியல் வரலாறு

- மௌரியர்களுக்குப் பிறகு வடக்கே ஆட்சிபீடமேறிய சுதேச மன்னர்களில் **சுங்கர்களும்** அவர்களைத் தொடர்ந்து **கன்வர்களும்** மிக முக்கியமானவர்களாவர்.
- தக்காணத்திலும் மத்திய இந்தியாவிலும் மௌரியர்களின் ஆட்சி மறைந்த பின்னர் நூறு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு சாதவாகனர்கள் ஆட்சிக்கு வந்தனர். புராணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆந்திரர்களுடன் இவர்கள் இணைத்துக் கூறப்படுகின்றனர்.
- புராணங்கள் ஆந்திரர்களின் ஆட்சியைப் பற்றிக் கூறுகின்றனவே தவிர சாதவாகனர்களின் ஆட்சியைப்பற்றி எதுவும் கூறவில்லை. அதே சமயம் சாதவாகனர்களின் கல்வெட்டுப் பொறிப்புகளில் ஆந்திரர்களின் பெயர் எங்கும் இடம்பெறவில்லை.
- சாவாகனர் காலத்துக்கு முன்னர் இங்கு குடியேற்றங்கள் இருந்து வந்ததைத் தக்காணத்தில் பல இடங்களில் **கிடைத்துள்ள செந்நிற மட்கலங்களும், கறுப்பு – சிவப்பு மட்கலங்களும் செம்பழுப்பு நிற வண்ணப்பூச்சு** கொண்ட மட்கலங்களும் உறுதி செய்கின்றன.
- இந்தக் குடியேற்றங்களில் பெரும்பாலானவை இரும்பைப் பயன்படுத்தும் பெருங்கற்காலக் கட்டிடக் கலைஞர்களுடன் சம்பந்தமுடையவை வடக்கின் பொருளாயதக் காலசாரத்துடன் ஏற்பட்ட தொடர்புகளால் ஊக்குவிக்கப்பட்டு இவர்கள் புதுப்புது நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

- **இரும்புக் கொழு முனையைப் பயன்படுத்துதல், நெல் மறுநடவு செய்தல்**, பெருகி வந்த நகரமயமாக்கம், எழுதக் கற்றுக்கொள்ளுதல் போன்றவை சாதவாகனர்கள் தலைமையில் அரசு தோன்றுவதற்கான நிலைமைகளைத் தோற்றுவித்தன.
- சில புராணக்கதைகளின்படி ஆந்திரர்கள் மொத்தம் 300 ஆண்டுக்காலம் அரசோச்சினர்; இக்காலப்பகுதியில்தான் சாதவாகன வம்சம் இப்பிரதேசத்தில் ஆட்சி புரிந்து வந்தது.
- சாதவாகனர்களின் ஆரம்ப கால கல்வெட்டுப் பொறிப்புகள் கி.**மு. முதலாம் நூற்றாண்டைச்** சேர்ந்தவை. இச்சமயம்தான் அவர்கள் கன்வர்களைத் தோற்கடித்து மத்திய இநதியாவின் சில பகுதிகளில் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.
- தொடக்க கால சாதவாகன மன்னர்கள் ஆந்திராவில் தோன்றவில்லை; **மகாராஷ்டிரத்தில்தான்** தோன்றினர்; அங்குதான் அவர்களது ஆரம்பகால கல்வெட்டுப்பொறிப்புகள் காணப்படுகின்றன.
- அவர்கள் மேல் கோதாவரி பள்ளத்தாக்கில் தங்கள் ஆட்சியை நிறுவினர். இப்பள்ளத்தாக்கு தற்போது மகாராஷ்டிரத்தில் பல்வேறு வகையான பயிர்களைப் பெருமளவில் சாகுபடி செய்கிறது.

TEACHER'S CARE ACADEMY
TCA
KANCHIPURAM
95665 35080

- சாதவாகனர்கள் தங்கள் ஆட்சியைப் படிப்படியாகக் கர்நாடகத்துக்கும் ஆந்திரத்திற்கும் விஸ்தரித்தனர். அங்கு அவர்களுடைய மிகப்பெரியப் போட்டியாளர்களாக இருந்தவர்கள் **சாகர்கள்**; அவர்கள் மேல் தக்காணத்திலும் மேற்கு இந்தியாவலும் தங்கள் பிரதேசங்களை சாகர்களிடம் இழந்தனர்.
- எனினும் **கௌதமீபுத்தர சதகர்ணி (கி.பி. 106 – 130)** என்ற சாதவாகன மன்னன் அப்போது தனது வமிச கௌரவத்தைக் காப்பாற்றினான். தான்தான் ஒரே பிராமணன் என்று உரிமை கொண்டாடிய அவன் சாகர்களைத் தோற்கடித்தான்; பல சத்திரிய மன்னர்களை அழித்தான்.
- தனது பகைவனான நாகப்பனாவின் வம்சத்தையே வேரறுத்துவிட்டதாக அவன் ஆர்ப்பரித்தான். இந்தக் கூற்று உண்மையாக இருக்கக்கூடும். ஏனென்றால் நாசிக் நகருக்கு அருகே கிடைத்துள்ள **நாகப்பனாவின் 8,000க்கு** மேற்பட்ட வெள்ளி நாணயங்கள் திரும்ப முத்திரையிடப்பட்டதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.
- சாகர்கள் வசமிருந்த **மால்வாவையும் கத்தியவாரையும்** அவன் கைப்பற்றிக் கொண்டான். கௌதமீபுத்திர சதகர்ணியின் பேரரசு வடக்கே மால்வாவிலிருந்து தெற்கே கர்நாடகம் வரை வியாபித்திருந்ததாகத் தோன்றுகிறது. ஆந்திரத்தின் மீதும் அவனது ஆதிக்கம் பரவியிருக்கக்கூடும்.
- கௌதமீபுத்திரனது வழித்தோன்றல்கள் கி.**பி. 220 வரை** அரசோட்சினர். அவனுக்கு அடுத்தபடியாக ஆட்சி பீடமேறிய **வசிஷ்திபுத்திர புலுமாயியின் (கி.பி. 130 – 154)** நாணயங்களும் கல்வெட்டுப் பொறிப்புகளும் ஆந்திராவில் காணப்படகின்றன;

இரண்டாம் நூற்றாண்டின் மத்திய வாக்கில் இந்தப் பிரதேசம் சாதவாகன இராச்சியத்தின ஒரு பகுதியாக இருந்து வந்தது என்பதை இவை காட்டுகின்றன.

- **அவுரங்காபாத்** மாவட்டத்தில் **கோதாவரிக்கரையில் பைத்தான்** அல்லது **பிரதிஸ்தானில் அவன் தனது தலைநகரை** அமைத்துக் கொண்டிருந்தான். கொங்கணி கரையோரப் பிரதேசத்தையும் மால்வாவையும் கைப்பற்றுவதற்காக சாதவாகனர்களுடனான தங்கள் சண்டையை சாகர்கள் மீண்டும் தொடங்கினர்.
- **சௌராஷ்ரத்தை (கத்தியவார்)** ஆண்டுவந்த **முதலாம் ருத்ரதாமன் (கி.பி. 130 – 150)** சாதவாகனர்களை இருமுறை தோற்கடித்தான்; எனினும் அவர்களுடன் திருமண உறவுகள் இருந்ததால் அவர்களை முற்றிலும் அழித்து விடவில்லை.
- பிற்கால சாதவாகன மன்னர்களில் ஒருவனான **யக்ஞ ஸ்ரீ சதகர்ணி (கி.பி. 165 – 194)** வடக்கு கொங்கணியையும் மால்வாவையும் சாகர்களிடமிருந்து மீட்டான். அவன் வணிகத்திலும் கடற்பயணத்திலும் மிகுந்த ஆர்வம் கொண்டவன். அவன் வெளியிட்ட நாணயங்கள் ஆந்திரத்தில் மட்டுமின்றி மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், குஜராத் ஆகிய இடங்களிலும் கிடைத்திருக்கின்றன.
- அவன் வெளியிட்ட நாணயங்களில் கப்பல் உருவம் பொறிக்கப்பட்டிருப்பதிலிருந்து கப்பற் பயணத்திலும் கடல் கடந்த வாணிகத்திலும் அவன் கொண்டிருந்த பற்றார்வத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

## பொருளாயதக் கலாசார அம்சங்கள்

- சாதவாகனர்களின் ஆட்சியில் தக்காணத்தின் பொருளாயகதக் கலாசாரம் ஸ்தல அம்சங்களையும் வடக்கத்திய அம்சங்களையும் கொண்டதாக இருந்தது.
- தக்காணத்தின் பெருங்கற்காலக் கட்டிடக் கலைஞர்கள் **இரும்பைப் பயன்படுத்துவதிலும் வேளாண்மையிலும் நன்கு பரிச்சயம்** பெற்றவர்களாக இருந்தனர்.
- ஏறத்தாழ கி.மு. 200க்கு முன்னர் இரும்பாலான ஒருசில மண்வெட்டிகளும் களைக் கொட்டுகளும் இப்பிராந்தியத்தில் பயன்படுத்தப்பட்டு வந்ததாக அறிகிறோம்.
- ஆனால் கிறித்தவ சகாப்தத்தின் முதல் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளில் இத்தகையக் கருவிகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்ததாகத் தெரிகிறது.
- பெருங்கற்காலத்திலிருந்து சாதவாகனர் காலம் வரைக் களைக்கொட்டுகளின் வடிவமைப்புப் பெரிய அளவில் மாறியதாகத் தெரியவில்லை.
- களைக்கொட்டுகளுக்கு முறையாக கைப்பிடிகள் மட்டுமே இக்காலகட்டத்தில் பொருத்தப்பட்டதாகத் தோன்றுகிறது.

TCA

- கைப்பிடிகளுடன் கூடிய **களைக்கொட்டுகள்** தவிர **அரிவாள்கள், மண்வாரிகள், உழுமுனைகள், கோடரிகள், வாய்ச்சிகள், கூர்மென் கத்திகள்** முதலியவையும் சாதவாகன மண்படுகைகளில் கிடைத்துள்ளன.

- இதுவல்லாமல், அம்பு முனைகள் குத்துவாள்கள் போன்றவையும் இப்படுகைகளில் கிடைத்துள்ளன.
- **கரீம் நகர்** மாவட்டத்தைச் சேர்ந்த ஓரிடத்தில் கருமான பட்டறை கூடக் கண்டுபிடிக்கப்பட்டிக்கிறது. கரீம் நகரிலும் வாரங்கல்லிலும் கிடைத்த இரும்புத் தாதுக்களை சாதவாகனர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கக் கூடும்; ஏனென்றால் பெருங்கற்காலக் கட்டத்திலேயே இந்த மாவட்டங்களில் இரும்புச் சுரங்கத் தொழில நடைபெற்று வந்ததற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.
- கிறித்துவ சகாப்தத்துக்கு முந்தைய நூற்றாண்டுகளிலும் அதற்குப் பின்னரும் **கோலார் வயல்களில தங்கச் சுரங்கப் பணிகள்** நடைபெற்றதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.
- சாதவாகனர்கள் தங்கக் கட்டிகளை செலாவணியாகப் பயன்படுத்தி இருக்கக்கூடும் என்று தெரிகிறது. குஷானர்கள் போல் அவர்கள் தங்க நாணயங்களை வெயிடாததிலிருந்து இது புலனாகிறது. அவர்கள் பெரும்பாலும் ஈய நாணயங்களையே வெளியிட்டனர்; இதற்கான சான்று தக்காணத்தில் கிடைத்திருக்கிறது.
- அவர்கள் **செம்பீயக் கலப்பு, செப்பு, வெண்கல நாணயங்களை** வெளியிட்டதாகவும் அறிகிறோம். கி.பி. மூன்றாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் சாதவாகனர்களுக்குப் பின்னர் கிழக்குத் தக்காணத்தில் ஆட்சிக்கு வந்த **இக்ஷ்வாகுகள்** தமது சொந்த நாணங்களை வெளியிட்டனர்.
- சாதவாகனர்களும் இக்ஷ்வாகுகளும் தக்காணத்தின் தாதுப் பொருள் வளங்களைப் பயன்படுத்திக் கொண்டதாகத் தோன்றுகிறது.

TCA

- தக்காண மக்கள் **நெல் மறுநடவு** முறையை நன்கு அறிந்திருந்தனர்; முதல் இரண்டு நூற்றாண்டுக் காலத்தில் கிருஷ்ணாவுக்கும் கோதாவரிக்கும் இடைப்பட்ட பிரதேசம் அதிலும் குறிப்பாக இவ்விரு நதிகளின கழிமுகப் பிரதேசம் அதிலும் குறிப்பாக இவ்விரு நதிகளின் கழிமுகப் பிரதேசம் மாபெரும் நெற்களஞ்சியமாகத் திகழ்ந்தது.
- தக்காண மக்கள் பருத்தியையும் சாகுபடி செய்தனர். அயல்நாட்டினரின் பயணநூல்களில் ஆந்திரம் அதன் பருத்திப் பொருள்களுக்கு பெரிதும் புகழ்பெற்று விளங்கிற்று. இவ்வாறு தக்காணத்தின் ஒரு கணிசமான பகுதி மிகவும் முன்னேற்றமடைந்த கிராமப்புறப் பொருளாதாரத்தை வளர்த்திருந்தது.
- **ஆந்திர இராச்சியம்** 1,00,000 காலாட் படையினரையும், 2,000 குதிரைப்படையினரையும், 1000 யானைகளையும் கொண்ட ஒரு இராணுவத்தைப் பராமரித்து வந்ததாக பிளினி கூறுகிறார். இதிலிருந்து இந்த அரசு ஒரு பெரிய கிராமத்தின் மக்கட் தொகையைக் கொண்டிருந்தது புலனாகிறது.
- இந்த மாபெரும் ராணுவத்தை வைத்துப் பேணுவதற்குப் போதுமான விளைபொருள்களை விவசாயிகள் உற்பத்தி செய்து வந்தனர் என்பதும் தெளிவாகிறது.
- வடபுலத்து மக்களுடனான தொடர்புகளால் தக்காண மக்கள் நாணயங்கள், சுட்ட

செங்கற்கள். வட்டக் கிணறுகள் முதலியவற்றைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டனர். பொருளாயத வாழ்க்கையின் இந்த அம்சங்கள் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு தக்காணத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுவிட்டன.

- **கரீம் நகர் மாவட்டத்திலுள்ள பெத்தபங்கூரில்** (கி.மு. 200 – கி.பி. 200) சுட்ட செங்கற்களும், மோடு வேய்வதற்கு தட்டையான மற்றும் துளைகளிட்ட ஓடுகளும் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இவை யாவும் கட்டிடங்கள் நீண்ட காலம் நிலைத்திருப்பதற்கு உதவி இருக்கக் கூடும்.
- இதில் மேலும் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம் என்னவென்றால் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த 22 செங்கல் கிணறுகள் இந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகும்.
- வீடுகளை நெருக்கமாகக் கட்டுவது இதனால் சாத்தியமாயிற்று. மேலும், கழிவு நீரை பாதாள சாக்கடைகள் மூலம் அகற்றி ஒதுக்குப்புறமாக அமைக்கப்பட்டுள்ள குழிகளில் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு வசதி செய்யப்பட்டிருப்பதையும் இங்கு காண்கிறோம்.
- பல கைவினைத் தொழில்கள் பெருகியதால் கி.மு. முதலாம் நூற்றாண்டு வாக்கில் மகாராஷ்டிரத்தில் நகரங்கள் தோன்ற ஆரம்பித்தன. ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு கிழக்கு தக்காணத்தில் அவை உதித்தெழுந்தன.
- கிழக்கு தக்காணத்தில் ஆந்திர நாடு சுற்றிலும் **அரண்காப்பு செய்யப்பட்ட 30 நகரங்களையும், எண்ணற்ற கிராமங்களையும்** கொண்டதாக இருந்தது என்று **பிளினி** தெரிவிக்கிறார்.

95665 35080

- **நகரங்கள் இருந்தன** என்பது கல்வெட்டுப் பொறிப்புகளிலிருந்தும், அகழ்வாய்வுகளிலிருந்தும் தெரிய வருகிறது. இங்கு எண்ணற்ற **ரோமாபுரி, சாதவாகன நாணயங்கள்** கண்டுபிடிக்கப்பட்டிருப்பது.
- வாணிகப் பெருக்கத்தைக் காட்டுகிறது. சுமார் ஒரு நூற்றாண்டுக்கப் பிறகு கிழக்கு தக்காணத்திலும், கோதாவரி – கிருஷ்ணா பகுதியிலும் இந்த நாணயங்கள் தோன்றின.

### சமூக அமைப்பு முறை

- சாதவாகனர்கள் **தக்காணத்தைச் சேர்ந்த ஒரு பழங்குடியினர்** எனத் தோன்றுகிறது. ஆனால் பிராமணர்களாக்கப்பட்டனர்.
- சீர்குலைந்திருந்த சதுர் வருண அமைப்பு முறைக்கு தான் புத்துயிரூட்டியதாக சாதவாகனர்களின் மிகவும் புகழ்பெற்ற மன்னனான **கௌதமீபுத்திர சதகர்ணி** உரிமை கொண்டாடுகிறான்.
- பல்வேறு சமூக அமைப்புகளைச் சேர்ந்த மக்களிடையே ஏற்பட்டுவரும் இனக் கலப்புக்கு தான் முற்றுப்புள்ளி வைத்ததாகவும் அவன் பெருமைப்பட்டுக் கொள்கிறான். சாகர்களின்

ஊடுருவலாலும், தக்காணத்தில் வாழ்ந்து வந்த பழங்குடி மக்கள் நுனிப்புல் மேயும் வகையில் மேலெழுந்தவாரியான முறையில் பிராமணமயமாக்கப்பட்டதாலுமே இந்தக் குழப்பம் ஏற்பட்டது.

- **சாகர்களுக்கும் சாதவாகனர்களுக்கும் இடையே** நடைபெற்ற **கலப்பு மணங்கள்** இந்து சமுதாயத்தில் **சாகர்களை சத்திரியர்களாக** ஏற்றுக் கொள்வதைச் சாத்தியமாக்கின. இவ்வாறே அப்பகுதியின் தொல்பழங்குடி மக்களும் பௌத்த பிட்சுகளால் மேன்மேலும் பண்பாடுடையவர்களாக ஆக்கப்பட்டனர்; நில மானியங்கள் வழங்கி மேற்கு தக்காணத்தில் குடியேறும்படி அவர்கள் தூண்டி ஊக்குவிக்கப்பட்டனர்.
- வணிகர்களும் பௌத்த பிட்சுகளுக்கும் மிகுந்த ஆதரவு அளித்து வந்ததாகத் தெரிகிறது; ஆரம்பகால பௌத்த குகை மடாலயங்கள் வாணிக மார்க்கங்களில் அமைந்திருப்பது இதை உறுதி செய்கிறது.

95665 35080

- **சாதவாகனர்கள்தான்** பிராமணர்களுக்கு நிலமானியங்கள் வழங்கிய முதல் ஆட்சியாளர்களாவர். அதே சமயம் பௌத்த பிட்சுகளுக்கும் மானியங்கள் அளிக்கப்பட்ட பல சம்பவங்கள் குறித்தும் அறிய வருகிறோம்.
- தர்ம சாஸ்திரங்களின்படி சத்திரியர்களின் கடமை ஆட்சி புரிவதாகும். ஆனால் **சாதவாகன** மன்னர்களோ தங்களை **பிராமணர்கள்** என்று அழைத்துக் கொண்டனர். **கௌதமபுத்திரன்** தன்னை உண்மையான பிராமணன் என்று பறைசாற்றிக் கொண்டான்.
- ஆந்திரர்கள் ஆரம்பகால சாதவாகனர்களின் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுவதால், அவர்கள் பின்னாளில் பிராமணர்களாக மாறிய ஸ்தல பழங்குடியினராக அநேகமாக இருக்கக் கூடும்.
- வடக்கைச் சேர்ந்த வைதிக பிராமணர்களோ **ஆந்திரர்களைக் கலப்பு சாதியினராகக்** கருதி வந்தனர். ஆந்திரர்கள் ஒரு கலப்பு சாதியினராக பிராமணீய சமுதாயத்தின் அரவணைப்புக்குள் கொண்டுவரப்பட்ட ஒரு பழங்குடியினர் என்பதை இது காட்டுகிறது.
- இந்தக் காலக்கட்டத்தில் கைவினைத் தொழில்களும் வாணிகமும் வளர்ந்தோங்கி வந்ததால் பல பெரு வணிகர்களும் கைவினைஞர்களும் முன்னணிக்கு வந்தனர்.
- வணிகர்கள் தாங்கள் வசிக்கும் நகரங்களின் பெயர்களைத் தங்களக்கச் சூட்டிக் கொள்வதில் பெருமிதம் கொண்டனர். **வணிகர்களும்** கைவினைஞர்களும் பௌத்த திருப்பணிக்கு ஏராளமான நன்கொடைகளை தாராளமாக வாரி வழங்கினர்.
- அவர்கள் ஆங்காங்கு நிடைவுக் கல்பொறிப்புகளை அமைத்தனர். கைவினைஞர்களில் **காந்திகர்கள்** அல்லது நறுமணப் பொருள்கள் தயாரிப்பவர்கள் நன்கொடையாளர்களாக அடிக்கடி குறிப்பிடப்படுகின்றனர்.
- பிற்காலத்தில் காந்திகர் எனும் பதம் சகல வகையான வணிகர்களையும் குறிப்பதாக ஆயிற்று. தற்காலத்தில் வழங்கப்படும் காந்தி என்னும் பட்டப்பெயர் இந்தப் பண்டைக்காலப் பதத்திலிருந்து தோன்றியதே ஆகும்.

- சாதவாகனர்களைப் பற்றிய மிகவும் சுவையான விஷயம் அவர்களது குடுமபக் கட்டமைப்புப் பற்றியதாகும். வட இந்தியாவில் பெற்றிருந்தான்.
- இதுவரை நாம் கூறிவந்திருக்கும் வடஇந்திய அரசர்கள் தந்தைவழிச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததாகவே தோன்றுகிறது. ஆனால் **சாதவாகனர்களிடமோ தாய்வழி சமுதாயக் கட்டமைப்பின்** தடய்ங்களைக் காண்கிறோம்.
- அவர்களுடைய மன்னனுக்கு அவனது தாயின் பெயரைச் சூட்டி அழைப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. கௌதமீபுத்திரன், வாசிஷ்தீபுத்திரன் போன்ற பெயர்கள் அவர்களது சமுதாயத்தில் **தாய் மிகுந்த முக்கியத்துவம்** பெற்றிருந்ததை எடுதுக் காட்டுவதாக உள்ளன.
- இன்றைய தீபக்றப இந்தியாவில் மகனின் பெயரில் தந்தையின் பெயரின் ஒரு பகுதியும் அடங்கியிருப்பதைப் பார்க்கிறோம்; அதில் தாய்க்கு இடம் ஏதுமில்லை; தந்தைவழி சமுதாய செல்வாக்கு மேலோங்கி இருப்பதையே இது காட்டுகிறது.
- ராணிகள் தங்கள் சொந்த விருப்பப்படி முக்கியமான மத நன்கொடைகளை வழங்கினர்; அவர்களில் சிலர் பகர ஆளுநர்களாகவும (ரீஜண்டுகள்) செயல்பட்டனர். எனினும் சாதவாகன ஆளும் குடும்பம் அடிப்படையில் தந்தை வழிப்பட்டதாகவே இருந்தது; இதனால் அரியணைக்கான வாரிசு ஆன்மாகனாகவே இருந்தான்.

## நிர்வாகப் பணி (Administration)

- தர்மசாஸ்திரங்கள் அரசனுக்கு நிர்ணயித்துத் தந்திருக்கும் கடமைகளை வழுவாது பிறழாது நிறைவேற்றுவதற்கு சாதவாகன மன்னர்கள் முயன்று வந்திருக்கின்றனர்.
- மன்னன் தர்மத்தை நிலைநாட்டுபவனாகக் கருதப்பட்டு வந்தான். அவனுக்குச் சில தெய்வீகப் பண்புகள் கற்பித்துக் கூறப்பட்டன. **ராமன், பீமன், கேசவன், அர்ஜுனன்** போன்ற **இதிகார புருஷர்களின்** இயல்புகளைச் சாதவாகன மன்னன் பெற்றிருப்பதாகக் கருதப்பட்டு வந்தது.

TCA

- வீரத்திலும் தீரத்திலும், வல்லமையிலும், துணிவிலும், மிகு புகழிலும் இந்தக் காவிய நாயகர்களுடனும் தெய்வீக சக்திகளுடனும் அவன் ஒப்பிடப்பட்டான். சாதவாகன மன்னன் தெய்வீகத் தன்மை கொண்டவன் என்பதை நிலைநாட்டுவதே இதன் குறிக்கோள் என்பது தெள்ளத் தெளிவு.
- **அசோகர் காலத்தில் நடைமுறையிலிருந்த** நிர்வாக அமைப்புகளில் சிலவற்றை சாதவாகனர்கள் அப்படியே வைத்துக் கொண்டனர்.
- அவர்களது மாவட்டம் **அஹரா** எனப்பட்டது; அசோகர் காலத்திலும் மாவட்டம் இதே பெயரில்தான் அழைக்கப்பட்டு வந்தது. மௌரியர் காலத்தைப் போன்றே அவர்களுடைய அதிகாரிகள் **அமத்தியர்கள், மகாமத்ரர்கள்** என அழைக்கப்பட்டனர்.
- எனினும் சாதவாகனர்களின் நிரவாகத்தில் சில ராணுவ, பிரபுத்துவ அம்சங்கள் இடம்பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

- **சேனாபதி** மாகாண ஆளுநராக நியமிக்கப்படுவதை இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். தக்காணத்திலிருந்த பழங்குடி மக்கள் முற்றிலும் இந்து சமயத்தைத் தழுவாததாலும், புதிய ஆட்சியை இன்னமும் உளப்பூர்வமாக ஏற்காததாலும் அவர்களை வலுவான ராணுவக் கண்காணிப்பில் வைத்திருப்பது அவசியமாயிற்று.
- கிராமப்புறங்களில் நிர்வாகம் **கௌல்மிகா** என்னும் ஓர் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவன் ஒரு படைப்பிரிவின் தலைவன். அவனது **படைப்பிரிவு 9 ரதங்களையும், 9 யானைகளையும், 25 குதிரைகளையும், 45 காலட் படைவீரர்களையும்** கொண்டதாக இருந்தது. ஆக, கிராமப்புறத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டு படைப்பிரிவுத் தலைவன் அங்கு அதிகாரியாக நியமிக்கப்பட்டான்.
- **கதகம், ஸ்கந்தரஸ்கள்** போன்ற பதங்கள் சர்வ சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டதிலிருந்தும் சாதவாகன ஆட்சியின் ராணுவ இயல்பை ஓரளவு தெரிந்து கொள்ளலாம். மேலே கூறியவை யாவும் அப்பகுதியில் மன்னன் தங்கியிருக்கும் வரை நிர்வாகக் கேந்திரங்களாகச் செயல்பட்ட ராணுவ முகாம்களாகும்.
- ஏனென்றால், அவர்களைப் போன்று நடந்த நிகழ்ச்சிகளை ஒளிவுமறைவின்றி எளிய நடையில் அபுல் ஃபாஸல் எழுதவில்லை; அவர் கடுரமுரடான நடையில் எழுதுகிறார்; பாட்டுடைத் தலைவனை ஒரு கவிஞன் வானளாவப் புகழ்வதைப்போன்றே இவர் அக்பரைப் புகழ்கிறார்; அக்பர் ஒரு அற்புத மனிதராக வர்ணிக்கப்படுகிறார்; அக்பரின் குறைகளும் அவரது பகைவர்களின் நிறைகளும் மறைக்கப்பட்டிருக்கின்றன; வர்ணனைகள் பகட்டான சொற்களால் அமைந்து உயிரோட்டமின்றி இருக்கின்றன; நூலைப் படிப்பவர்கள் வெறுப்படையும் படி அவர் அக்பரை அளவுக்கு மிஞ்சிப் புகழ்கிறார்; தம்மைப் புகழ்ந்து எழுதும் அந்நூலுக்குத் தாமே ஒப்புதலும் அளித்தார் அக்பர், என்று கூறுகிறார்.

- எல்ஃபின்ஸ்டனின் இக் கூற்றை மறுப்பது போன்று அமைகிறது **பிளாக்மேன்** (Blockman) என்பவர் அக்பர் நாமாவைப் பற்றிக் கூறுவது. மேல்நாட்டு எழுத்தாளர்கள், அபுல் ஃபாஸல் வெறும் பரப்பு வார்த்தைகளைப் பயன்படுத்தி அக்பரைப் புழ்ந்து கூறுபவர் என்றும், உண்மைகளைத் திரையிட்டு மறைப்பவரென்றும் குறை கூறுகின்றனர்.
- ஆனால், அக்பர்நாமாவைக் கூர்ந்து கவனித்தால் இவ்வாறு குறை கூறக் காரணமே இல்லை என்பது தெரியவரும். கீழை நாட்டு வரலாற்றாசிரியர்களும் புலவர்களும் தங்கள் அரசர்களையும் பாட்டுடைத்தலைவர்களையும் அளவுக்கு மிஞ்சிப் புகழ்வது இயல்பு சுருங்கச் சொன்னால் கிழை நாட்டு வரலாற்று நூல்களும் பாட்டுகளும் வெறும் புகழ்ச்சிக் குவியல்கள்தாம். அந்தக் கண்ணோட்டத்தோடு நோக்கும்பொழுது நாம் அபுல் ஃபாஸலிடம் குறைகளைக் காண முடியாது.

## 7. அயினி அக்பாரி (Ain – i – Akbari):

- **அபுல் ஃபாஸலால்** எழுதப்பட்ட இந் நூலை அக்பர்நாமாவின் ஒரு பகுதி என்று கூறலாம். இது அக்பரின் ஆடசிமுறைகளை அறிய அத்தியாவசியமானது.
- பலதரப்பட்ட அரசியல் அதிகாரிகள், அலுவலர்கள ஆகியோரின் கடமைகள் இதில் குறிக்கப்படுகின்றன. **பொருள்களின் விலைப்பட்டியல், அரசாங்க வரவுசெலவுக்** கணக்குகள் முதலியவற்றைப் புள்ளி விவரங்களுடன் இதில் காணலாம்.
- அக்காலப் பொதுமக்களின் வாழ்க்கமை முறைகள், சமயச் சடங்குகள், சமயக் கோட்பாடுகள், பொருளாதார நிலை முதலியவற்றை நூலாசிரியர் தெளிவாக விளக்குகிறார்.

TEACHER'S CARE ACADEMY
KANCHIPURAM
95665 35080

- ஆனால், அக்பர்கல அரசியல், சமூக, பொருளாதார நிலைகளைச் செவ்வனே அறிய அகபர்நாமாவையும், அயினி அக்பாரியையும் சேர்த்துப் படிக்க வேண்டும். அவை இரண்டும் சிலம்பும் மணியும் போல ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை.
- ஆகவேதான் சிறப்பு மிக்க வரலாற்றாசிரியர் **மோர்லேண்ட்** என்பவர் ‘அவை இரண்டையும் தனியாகப் பிரித்து, தனித்தனியாகப் படித்தால் தனித்த ஒன்றில் தாம் விரும்பும் செய்திகளனைத்தும் கிடைக்காது; ஆனால், அவை இரண்டிலும் இல்லாத செய்திகள் இல்லை. எல்லாச் செய்திகளையும் அவை இரண்டிலும் காணலாம்’ என்று கூறுகிறார்.

## 8. தபக்கத் – இ – அக்பாரி (Tabakat – i – Akbari):

- இந்நூலாசிரியர் நைஸாமுத்தீன் அஹமது (Nizamuddin Ahmad) என்பவராவார். இவர் அக்பரின் படைத்துறை அதிகாரியாக நெடுநாள் பணியாற்றி 1594 ஆம் ஆண்டு இறந்தார். இது அக்பரின் நெடுநாள் வரலாற்றைக் கூறுகிறது.
- நைஸாமுத்தீன், அபுல் ஃபாஸலைப் போன்று அக்பரை ஏற்றி மாற்றாரைத் தூற்றாமல் நடுநிலை திரியாமல் எழுதுகிறார். அக்பரின் சமயக் கோட்பாடுகளைப்பற்றி இவர் யாதும் கூறவில்லை. அக்பரைப்பற்றிப் பல முக்கியச் செய்திகள் இந்நூலில் காணப்படவில்லை.

- புல்ஃபாஸலின் கருத்துகளுக்கும் நைஸாமுத்தீனின் கருத்துகளுக்குமிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றன. **ஃபெரிஷ்டாவும் (Ferishra)** இன்னும் பல வரலாற்று ஆசிரியர்களும் இந்நூலை மூல நூலாகப் பயன்படுத்துகின்றனர்.
- **கௌன்ட் நோயர் (Count Noer)** என்னும் ஜெர்மன் வரலாற்றாசிரியர் 'அக்பரின் காலத்தைத் தெரிந்துகொள்ள உதவும் நூல்களில் இது மிக முக்கியமானது' என்று இந்நூலைப் புகழ்ந்து கூறுகிறார்.[1]
- **எர்ஸ்கின்** என்பவர் நைஸாமுத்தீன் அஹமதை ஒரு தலைசிறந்த வரலாற்று ஆசிரியர் என்று குறிப்பிடுகிறார். 'மொகலாயர்கள் கால வரலாற்று நூல்களில் ஏன் தபக்கத் – இ – அக்பாரிக்கு முக்கிய இடம் கொடுக்கப்படவில்லை என்பது தமக்குப் புரியாத புதிராக இருக்கிற'தென்று **கர்னல் லீஸ் (Lees)** என்பவர் கூறுகிறார்.

## 9. முந்தகாபுத் தவாரிக் அல்லது தாரீக் – இ – பதௌனி (Munta Khabu – T Tawarikh or Tarikh – I – Badauni):

- இந்நூலாசிரியரின் பெயர் **அப்துல்காதர்.** இவர் ரோஹில்கண்டிலுள்ள **பதௌன்** என்ற இடத்தைச் சேர்ந்தவராதலால் இவர் **பதௌனி** என்றும் அழைக்கப்பட்டார். இந்நூல் இஸ்லாமிய உலகத்தைப்பற்றிப் பொதுவாக விவரிக்கிறது.
- தம்முடைய நூல் தமது நண்பர் நைஸாமுத்தீன் அஹமதுவால் எழுதப்பட்ட **தபக்கத்தி அக்பாரியின்** சுருக்கமென்றும் அதை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதென்றும் பதௌனியே கூறகிறார்.

TCA

- இந்நூலில் அக்பரின் ஆட்சியைப் பற்றிய செய்திகளைக் காலவரிகைப்படி 1595 ஆம் ஆண்டுவரை விவரமாக அறியலாம். சுன்னி வகுப்பைச் சார்ந்த தீவிர சமயப் பற்றுடைய பதௌனி அக்பரின் சமயக்கோட்பாடுகளையும், அதற்கு அடிப்படைக் காரணமாகவிருந்த அபுல் ஃபாஸலையும் வெறுத்ததில் வியப்பில்லை.
- அக்பரின் கோட்பாடுகளை எதிர்த்து எழுதப்பட்டதால் இந்நூல் அக்பரின் காலத்தில் வெளியிடப்படவில்லை. அக்பரின் சமயக் கோட்பாடுகளின் குறைகளைப்பற்றி வேறெந்த நூலும் இவ்வளவு விரிவாக விளக்கவில்லை.
- **பதௌனி அரபி, பாரசீகம், சமஸ்கிருதம்** ஆகிய மொழிகளில் நல்ல பாண்டித்யம் பெற்றவர்; வரலாறு, வனநூல், இசை முதலியவற்றிலும் தீவிர ஈடுபாடு உடையவர்; ஷேக் **முபராக், அபுல் ஃபாஸல், பெய்ஸி** ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகொண்டவர். பேரரசர் அக்பருக்கு மிக நெருங்கியவர். ஆகவே, அக்பரின் ஆட்சியைப்பற்றி எழுத அவருக்கு எல்லாத் தகுதிகளுமிருந்தன.
- பதௌனியின் கருத்துகளும் வரலாற்றுக் குறிப்புகளையும் ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது. அக்பரை அளவுக்கு மிஞ்சிப் புகழ்ந்து அவருக்கு இறைவனுக்கு ஈடான ஓர் இடம் கொடுக்கும் அபுல்ஃபாஸலைப் போன்ற ஒருவர் எழுதியிருக்கும் நூலை அக்பரின் குறைகளைச் சுட்டிக்காட்டி அவரும் மற்றவர்களைப் போன்று குற்றங்கள் செய்யக்கூடிய

சாதாரண மனிதர்தான் என்று கூறும் பதௌனியின் நூலுடன் ஒத்துப் பார்க்கும்பொழுதுதான் அக்பரின் ஆட்சியைப்பற்றிய உண்மை வெளியாகும் என்பது வின்ஸென்ட்மித்தின்[1] கருத்து.

## 10. தாரிக் – இ – ஃபெரிஷ்டா (Tarikh – I – Perishra):

- இந்நூலின் ஆசிரியர் **முஹம்மத் காசிம் ஹிண்டுஷா** (Muhammad Kasim Hindusha) என்பவர் ஆவார். இவர் **ஃபெரிஷ்டா** என்றும் அழைக்கப்பட்டார். இந் நூல் பெரும்பாலம், தபக்கத் – இ – அக்பாரியை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டிருக்கிறது.
- இது 1612 ஆம் ஆண்டு வரை இந்தியாவில் அரசாண்ட முஸ்லிம் பதினாறாம் நுற்றாண்டின் தக்காண அரசுகளைப்பற்றிய செய்திகள் அதிகம் கிடைக்கின்றன.

## 11. ஜஹாங்கீரின் நினைவுக் குறிப்புகள் (Turik – I – Jahangire):

TCA

- இக்குறிப்புகளின் மூலம் ஜஹாங்கீரின் ஆட்சிமுறைச் செல்வநிலை, குணநலன்கள் முதலியவற்றைத் தெளிவாகத் தெரியலாம்.
- அக்பரின் குணநலன்களும் அவரின் இறுதிக் கால நிகழ்ச்சிகள் சிலவும் குறிக்கப்படுகின்றன. தக்காணப் போர்களும் அதன் முடிவுகளும் ஆராயப்படுகின்றன.
- ஜஹாங்கீரின் அன்றாட வாழ்க்கை, பழக்கவழக்கங்கள், உணவுப் பழக்கங்கள், பொழுதுபோக்குகள் முதலியவை குறிப்பிடப்படுகின்றன. அவரது முக்கிய அமைச்சர்களைப் பற்றிய செய்திகளும் காணக்கிடக்கின்றன. அவர் அபுல்ஃபாஸலைக் கொலை செய்வித்த உண்மை குறிப்பிடப்படுகிறது. குஸ்ரு ஷெர்ஆப்கான் ஆகியோருடன் இவர் கொண்டிருந்த தொடர்பும் இவர் இளவரசராய் இருந்தபொழுது தம் தந்தையை எதிர்த்து நடத்திய கலகமும் இந்நூலில் காணப்படவில்லை.
- பேரரசர் ஜஹாங்கீர் தாம் அஜ்மீர், மாளவம், குஜராத், பஞ்சாப், காஷ்மீர் முதலிய இடங்களுக்கு மேற்கொண்ட பயணங்களை விரிவாகக் கூறுவதால் அம்மாநிலங்களிலுள் அரசியல், பொருளாதார நிலைகள் தெளிவாகத் தெரிகின்றன.
- **ஜஹாங்கீரினால் எழுதப்பட்ட இக்குறிப்புகள்** சிறந்த வரலாற்றுச சான்றாக விளங்குகின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால், தாம் பட்டமேற்ற பதினாறு ஆண்டுகள் வரைதான் ஜஹாங்கீரினால் எழுத முடிந்தது. அதன்பின் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களாலும், தோல்விகளாலும், உடல்நலமின்மையாலும் ஜஹாங்கீரினால் எழுத முடியவில்லை.
- ஆகவே, அவர் **முதாமத்கான் பக்ஷி** என்பவரை எழுதுமாறு பணித்தார். முதாமத்கான் ஜஹாங்கீர் பட்டமேற்ற பத்தொன்பதாம் ஆண்டுவரையுள்ள நிகழ்ச்சிகளை ஜஹாங்கீரின் மேற்பார்வையில் எழுதினார்.

## 12. இக்பல்நாமா – இ – ஜஹாங்கிரி (Ikbalnama – I – Jahangiri):

- இந்நூலாசிரியர் **முதர்மத்கான்** என்பவராவார். இவரை ஜஹாங்கீர் தமது குறிப்புகளைத் தொடர்ந்து எழுதப் பணித்தார்.

- **இந்நூல் தைமூரின் குலத்தவரை** வரிசையாகக் கூறி, பின் பாபரின் படையெடுப்புமுதல் ஜஹாங்கீரின் ஆட்சியின் முடிவு வரையுள்ள நிகழ்ச்சிகளைக் கூறுகிறது.
- இந்நூல் குறிப்பிடும் ஜஹாங்கீரின் ஆட்சியின் முற்பகுதியை ஜஹாங்கீரின் குறிப்புகளின் சுருக்கமென்றே கொள்ளலாம். ஜஹாங்கீரின் ஆணைக்கிணங்கவே இந்நூல் எழுதப்பட்டதால் இது ஜஹாங்கீரின் ஆட்சியைப் புகழ்ந்து கூறுவதில் வியப்பில்லை.
- ஜஹாங்கீரின் அமைச்சர்கள், அவையோர் மருத்துவர்கள், புலவர்கள் முதரியோர்களைப்பற்றிச் செய்திகள் இந்நூலில் காணக்கிடக்கின்றன.

## 13. பாத்ஷாநாமா (Padsha Nama):

- இந்நூல் **ஷாஜஹானின்** ஆட்சிக் காலத்தில் முதல் இருபது ஆண்டுகளின் நிகழ்ச்சிகளை மிக விரிவாகக் கூறுகிறது.
- ஷாஜஹான் கால மொகலாயப் பேரரசைப்பற்றித் தெரிந்துகொள்ள உதவும் மிக முக்கிய நூல் இதுவே. இந்நூலாசிரியர் **அப்துல் ஹமீத் லாஹுரி** (Abdul Hamid Lahori) அபுல்ஃபாஸலிடம் பெரும் மதிப்புக் கொண்டவர்; அவர் எழுதிய அக்பர்நாமாவையும் அயினி அக்பாரியையும் ஊன்றிப்படித்துத் தாமும் அவ்வாறே எழுத முனைந்தார்.
- ஆனால், இந்நூலின் நடை அபுல்ஃபாஸலின் நடையைப் போன்று அமையாது மிக எளிய இனிய நடையில் அமைந்திருக்கிறது.
- **ஷாஜஹானின் பிறப்புக்கணிப்புடன்** (horoscope) தொடங்கும் இந்நூல் அவர் பட்டமேற்பதற்குமுன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகிறது.
- பேரரசரின் உறவுக்காரர்கள், அவையோர்கள், அரசியல் அதிகாரிகள் முதலியோரைப்பற்றி அவர்களின் தகுதிக்கேற்ப பரிசைப்படுத்திக் கூறுகிறது. அவையோருக்கும், கற்றுணர்ந்த சான்றோர்களுக்கும், புலவர்களுக்கும் கொடுக்கப்பட்ட விருதுகள், வழங்கப்பட்ட பரிசுகள், ஓய்வு ஊதியங்கள் முதலியவற்றையும் இந்நூலில் காணலாம்.
- இதை அடிப்படையாகக் கொண்டே **கூஃபிகான்** (Kufikhan) தனது **முந்தகாபூல்லுபப்** (Muntakhabul Lubab) என்ற நூலை எழுதினார்.

95665 35080

## 14. ஷாஜஹான் – நாமா (Shahjahan Nama):

- இந்நூலாசிரியர் **இனாயத்கான்** (Inayath Khan) என்று அழைக்கப்பட்டார். இவரது இயற்பெயர் **முஹம்மத் தாஹீர்** (Muhammad Tahir) .
- இவர் பேரரசர் **ஷாஜஹானிடமிருந்த மன்சப்தார்களுள்** ஒருவர். பேரரசரின் நெருங்கிய நண்பருமாவார். சிலகாலம் பேரரசரின் நூல்நிலையத்தின் அதிகாரியாகவுமிருந்தார். இந்நூலில் ஷாஜஹானின் முப்பதாண்டு ஆட்சிக் கால வரலாறு கூறப்பட்டிருக்கிறது.
- ஷாஜஹானின் முதல் இருபதாண்டு ஆட்சிக் காலத்தைப்பற்றி எழுத, தாம் பாத்ஷாநாமாவையே அடிப்படையாகக் கொண்டதாக இனாயத்கானே கூறுகிறார்.

## 15. ஆலம்கிர்நாமா (Alamgir Nama):

- இந்நாலாசிரியர் **முஹம்மத் காசிம்** (Muhammad Kazim) ஔரங்கசீப்பின் முதல் பத்தாண்டுக் கால ஆட்சியினைப்பற்றித் தம் நூலில் விளக்குகிறார். இதனை ஔரங்கசீப்பே எழுதத் தூண்டினார்.
- ஆனால், அவரே இதனைத் தொடர்ந்து எழுத வேண்டாமெனத் தடுத்துவிட்டாராம். பேரரசர் ஔரங்கசீப் இந்நூலை எழுதத் தம்மை உற்சாகப்படுத்திய விதத்தை நூலாசிரியர் நூலின் முகவுரையில் விவரிக்கிறார்.
- அவ்வப்பொழுது எழுதி முடிக்கப்பட்ட பகுதிகளை அரசரே பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்தார். அரசாங்க ஆவணக் காப்பகத்திலுள்ள ஆவணங்களைப் பயன்படுத்த நூலாசிரியருக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனவே, இந்நூல் சிறந்ததோர் ஆதார நூலாக அமைந்திருப்பதில் வியப்பில்லை.
- இருந்தாலும் இந்நூல் ஔரங்கசீப்பின் ஆட்சியைப் போற்றி அவரை ஏற்றி அவரது உடன்பிறப்புகளைத் தூற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. கடினமான சொற்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருக்கும் இந்நூலில் கருத்தாழத்தைவிடச் சொல்லழகு அதிகம்.
- தாராஷுக்கோவைக் கண்ணியமற்றவரென்றும், ஷீஜாவைக் கோழையென்றும் நூலாசிரியர் பல இடங்களில் தூற்றுகிறார்.
- **கூஃபவிகான் முந்தகாபூல் லுபப்** என்னும் தன் நூலுக்கு ஆலம்கீர் நாமாவையே ஆதாரமாகக் கொண்டதாகக் கூறுகிறார்.
- இந்நூல் ஷாஜஹான் நோய்வாய்ப்பட்டிருந்தபொழுது தாராஷுக்கோ ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டது முதல் ஔரங்கசீப்பின் ஆட்சியின் முதல் பத்து ஆண்டுகள் வரை நடந்த நிகழ்ச்சிகளை விவரிக்கிறார்.

## 16. மா அசிர் ஆலம்கிரி (Ma – asir - Alamgiri):

TEACHER'S CARE ACADEMY TCA KANCHIPURAM
95665 35080

- இந்நூலாசிரியர் **முஹம்மத் சகி முஸ்தெயித்கான்** (Muhammad Saki Mustaid Khan) என்பவர் ஆவார். இது ஔரங்கசீப்பின் ஆட்சிக்காலத்தை ஆரம்பத்திலிருந்து முடிவு வரை விவரிக்கிறது.
- இந்நூல் 1710 ஆம் ஆண்டு அதாவது, ஔரங்கசீப் இறந்து மூன்று ஆண்டுகளுக்குப்பின் எழுதி முடிக்கப்பட்டது. நூலாசிரியர் ஏறத்தாழ **நாற்பது** ஆண்டுகள் மொகலாய அவையோருடன் தொடர்பு கொண்டவர். இந்நூலில் ஔரங்கசீப்பின் ஆட்சிக்காலத்தைப் பற்றிய எல்லா விவரங்களும் அடங்கியிருக்கின்றன என்று **ஸ்டீவர்ட்** (Stewart) என்பவர் கருத்துத் தெரிவிக்கிறார்.
- இந்நூலாசிரிரைப்பற்றிக் குறிப்பிடும் **கூஃபிகான்** தமது முந்தகாபூல் லுபப் என்ற நூலில் 'பேரரசர் ஔரங்கசீப் தமது ஆட்சியின் பத்தாவது ஆண்டில் இனி தமது ஆட்சியைப் பற்றிய வரலாறு எழுதப்படக்கூடாது என்று ஆணையிட்ட பின்பும் முஸ்தெயித்கான்

இரகசியமாகப் பேரரசரின் தக்காணப் படையெடுப்பு, அங்குள்ள சில கோட்டைகளை அவர் முற்றுகையிட்டது ஆகியவைகளைப்பற்றிய குறிப்புகளை எடுத்து வைத்துக்கொண்டு தானிருந்தார்' என்று கூறுகிறார்.

- இந்நூல் தேவையற்ற சில விவரங்களை விரிவாகக் கூறுகிறது. உதாரணமாகச் சில மசூதிகளின் அமைப்பைப்பற்றியும், அங்குத் தொடுகை நடத்தும் சில சமய குருக்களின் தகுதிகள்பற்றியும் விளக்கமாகக் குறிப்பிடுகிறது.

## 17. முந்தகாபூல் லுபப் (Muntakhabul Lubab):

- இந்நூலின் ஆசிரியர் **கூஃபிகான்** என்று அழைக்கப்பட்டார். இவரது இயற்பெயர் **முஹம்மத் ஹாஷிம்** (Muhammad Hashim) என்பது இந்நூல் பாபரின் **1519** ஆம் ஆண்டின் இந்தியப் படையெடுப்பு முதல் **1733** ஆம் ஆண்டு வரையில் மொகலாயர்களைப் பற்றியும் அவர்களின் ஆட்சிமுறைகளைப்பற்றியும் விவரிக்கிறது.
- இந்நூலாசிரியர் பேரரசர் ஔரங்கசீப்பிடம் இராணுவ அதிகாரியாகவும், அரசியல் தூதராகவும் பணியாற்றினார். இந்நூல் இளரங்கசீப் இறந்து பல ஆண்டுகள் கழிந்த பின்பே எழுதிமுடிக்கப்பட்டது.

TCA

- ஔரங்கசீப் தமது ஆட்சியின் பத்தாண்டுக் காலத்திற்குப் பின் வரலாறு எழுதுவதைத் தடைசெய்திருந்ததால் கூஃபிகான் வரலாற்று செய்திகளை இரகசியமாகச் சேர்த்துவைத்துப் பின் தொகுத்து எழுதினாரென்று கூறப்படுகிறது. அதன் காரணமாகத்தான் இவர் கூஃபிகான் என்று அழைக்கப்பட்டராம்.
- **கூஃபி (Kuoli) என்ற பாரசீகச் சொல் 'மறைபொருள்' என்று பொருள்படும்**.
- இந்நூலில் ஔரங்கசீப்பின் ஆட்சியைப் பற்றிய எல்லா விவரங்களும் கிடைக்கின்றன..

## 18. நுஷ்னா – இ – தில்கஷா (Nuska – I – Dilkasha):

- இந்நூலை எழுதியவர் **பீம்சென்** (Bhimsen) என்னும் ஓர் இந்து அறிஞராவார். இவர் ஔரங்கசீப்பிடம் **பணியாற்றிய படைத் தளபதி** ஒருவரின் செயலராகவிருந்தார். அரசாங்க அதிகாரிகள் பலருடன் நல்லுறவு கொண்டிருந்தார். அதனால், அரசியல் இரகசியங்கள் பலவற்றைத் தெரிந்திருந்தார்.
- அவர் ஓர் இந்துவாக இருந்த காரணத்தாலும், எதையும் உற்றுணர்ந்து புரிந்து கொள்ளும் தன்மையுடையவராக இருந்த காரணத்தினாலும், பேரரசர் ஔரங்கசீப்பிற்குத் தெரியாமல் எழுதியதாலும் அவருடைய நூலில் ஔரங்கசீப்பின் ஆட்சியிலுள்றள பல குற்றங்குறைகள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.
- பாரசீக மொழியில் எழுதப்பட்ட இந்நூலில் ஔரங்கசீப்பின் தக்காண நடவடிக்கைகள் பற்றி அதிகமான செய்திகள் கிடைக்கின்றன. பொதுவாக, இதில் 1656 ஆம் ஆண்டு முதல் 1709 ஆம் ஆண்டு வரையிலுள்ள மொகலாயரின் வரலாற்றை அறியலாம்.

## 19. ஃபதூஹத் – இ – ஆலம்கிரி (Fatuhat – j – Alamgiri):

- இந்நூல் ஔரங்கசீப்பின் அவையிலிருந்து ஒருவரிடம் பணியாற்றிய **ஈஸ்வரதாஸ்** என்ற குஜராத்திய அந்தணரால் 1731 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது.
- இந்நூலில் 1657 ஆம் ஆண்டு முதல் 1698 ஆம் ஆண்டு வரையில் மாளவம், இராஜபதனம் ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் காணலாம்.
- ஷாஜஹானின் உடல் நலக்குறைவின்போது ஏற்பட்ட அரசுரிமைப போர்கள், சிவாஜியின் மகன் இராஜாராம் தென்னிந்தியா நோக்கிச் செல்லுதல் முதலிய நிகழ்ச்சிகள் விரிவாக விவரிக்கப்படுகின்றன.

## 20. ஔரங்கசீப், சிவாஜி ஆகியோரின் முடங்கல்கள்:

- இம்முடங்கல்களின் மூலம் ஔரங்கசீப், சிவாஜி ஆகியோருக்கிடையிலிருந்த உறவையும் அக்கால அரசியல் நிலையையும் அறியலாம். **ஔரங்கசீப்பின் முடங்கல்கள் பில்லிமோரியா** (Billimoria) என்பவராலும், சிவாஜியின் முடங்கல்கள் **ஃபராஸ்நிஸ்** (Farasnis) என்பவராலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுத் தொகுக்கப்பட்டிருக்கின்றன.
- ஔரங்கசீப்பின் முடங்கல்களின் பெரும்பகுதி அவர் தம் மக்களுக்கு எழுதியவை. அவைகளில் ஔரங்கசீப்பின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் அவரது மனநிலையையும், அவர் தாம் செய்த பல தவறுகளுக்காக மனம் நொந்து துயரடைந்திருந்ததையும் காணலாம்.
- சில முடங்கல்களில் அவரது மக்களுக்கு அரசரின் கடமைகளையும் 'மக்கள் தந்தைக்கு ஆற்றும் உதவி' பற்றியும் வலியுறுத்திக் கூறும் வகையில் அமைந்துள்ளன.

## நினைவில் நிறுத்தவும்

**முகலாயர்கள்(Mughals) – ஆதாரங்கள்**

1. **துசுக் – இ – பாபரி (பாபர்நாமா) (TUZUK-I-BABUR)**
   - பாபரின் சுயசரிதை
   - துருக்கிய மொழியில் விட்டுவிட்டு 25 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது.
   - ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்தவர்கள் **– 3 பேர்**
     - Leyden & Erskine (லெய்டன் & எர்கின்சன்)
     - L. King (L.கிங்)
     - M.A. Beveridge. (மேடம் அன்னெட் பேவரிட்ஜ்)

TEACHER'S CARE ACADEMY KANCHIPURAM 95665 35080

- கி.பி. 1508 – 19, 1520 – 25, 1529 – 30 ஆகிய காலக் கட்டங்கள் பற்றி எழுதப்படவில்லை.
- இதை பாரசீக மொழியில் மொழி பெயர்த்தவர்கள்

- Painda Khan (1583) – ( பைண்டாகான்)
- அப்துல் ரஹிம்கான் இ கானன்

**2. தஸீரத் உல்வக்கியத்**

- உமாயூனின் பணியாளர் ஜவஹர் எழுதியுள்ளார்.

**3. உமாயூன் நாமா (பாரசீகமொழி)**

- உமாயூனின் சகோதரி குல்பதன் பேகன் எழுதியது. (தாய்Dildar Begun)
- உமாயூனின் வெற்றி தோல்விகள் பற்றி கூறுகிறது. **அக்பர் காலத்தில்** எழுதப்பட்டது.

**4. தாரிக் – இ – ரஷீதி**

- எழுதியவர் – மிர்ஷாஹைதர்
- உமாயூனின் குணநலனை கூறுகிறது.

**5. அக்பர்நாமா**

- அபுல்பாசல் எழுதியது (1595 ல்எழுதப்பட்டது) பாரசீகமொழி .
- அக்பரின் வரலாற்றை 3 தொகுதிகளாக எழுதியுள்ளார்.

TCA

**6. அய்னி அக்பரி**

- அபுல்பாசல் எழுதியது (பாரசீகமொழி)
- பேரரசின்சட்ட விதிகளும், புள்ளி விவரங்களையும் கூறுகிறது.

**7. தபக்கத்-இ-அக்பாரி- அபுல் ஃபாசல்**

- அக்பரின் கடிதங்கள் பற்றி கூறுகிறது.

**8. மக்துபதி அலாமி**

- முகலாயப் பேரரசின் கடிதங்கள் பற்றி கூறுகிறது.

**9. முன்தகாபுத்தவாரிக்**

- அப்துல் காதிர் அக்பரின் செய்கைகளை விமர்சித்து எழுதியது.

**10. தபகத் – இ – அக்பரி**

- நிசாமு தீன் பக்ஷி எழுதியது.
- அக்பரின் 36 வருட வரலாற்றை கூறுகிறது.

**11. துசுக் – இ – ஜஹாங்கிரி**

- ஜஹாங்கிரின் சுயசரிதை
- தன் **16** வதுஆட்சி ஆண்டு வரையிலான நிகழ்வுகளை **ஜஹாங்கீர்** எழுதினார்.
- ஜஹாங்கீர் கால **சமூக, பொருளாதார,** கலாச்சார நிலையை கூறுகிறது.

இந்நூலின் தொடர்ச்சியை எழுதியவர் – **முகம்மத்கான்.**

**12. இக்பால் நாமா இ ஜஹாங்கிரி**

- எழுதியவர் – **முதாமத் கான்**
- ஜஹாங்கீர் ஆட்சி பற்றி அறிய உதவுகிறது

**13. பாதுஷா நாமா – முகம்மது தாஹீர் (இனாயத்கான்)**

- ஷாஜகானின் நெருங்கிய நண்பர் மற்றும் நூல்நிலைய அதிகாரி.
- அவரது 30 ஆண்டுகால ஆள்சி வரலாற்றை கூறுகிறது.

**14. அவுரங்கசீப் கால நூல்கள்**

- மாசிரி ஆலம் கீரி - **முஸ்தாயித்கான்**
- முன்தகாபுல்லுபப் - **காஃபி கான்**
- மா அசிர் ஆலம்கீர் நாமா - **மிர்சா முகமது கான்**
- ஃபதுஹத்-இ - ஆலம்கீரி - **முகமதுமகூம்**
- நுஷ்னா-இ-தில்கஷா - **பீம்சென்**

**முகலாய மன்னர்கள்**

- பாபர் - **கி.பி. 1526 – 30**
- உமாயூன் - **கி.பி. 1530 – 40, 1555 – 56**
- அக்பர் - **கி.பி. 1556 – 1605**
- ஜஹாங்கீர் - **கி.பி. 1605 – 1627**
- ஷாஜகான் - **கி.பி. 1628 – 1658**
- ஔரங்கசீப் - **கி.பி. 1659 – 1707**
- முதலாம் பகதூர்ஷா - **கி.பி. 1707 – 1712**
- ஜஹாந்தர்ஷா - **கி.பி. 1712 – 1713**
- ஃபரூக்ஷியார் - **கி.பி.1713 – 1719**
- முகம்மதுஷா - **கி.பி.1719 – 1748**
- அகமதுஷா - **கி.பி.1748 – 1754**
- இரண்டாம் ஆலம்கீர் - **கி.பி. 1754 – 1759**
- இரண்டாம் ஷாஆலம் - **கி.பி. 1759 – 1806**
- இரண்டாம் அக்பர் - **கி.பி. 1806 – 1837**
- இரண்டாம் பகதூர்ஷா - **கி.பி. 1837 – 1858 (Last Ruler)**

TCA

**TEACHER'S CARE PUBLICATION**
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

**2025-2026**

# PG TRB

**G.O No. 219** **New Syllabus**

# HISTORY

*(Tamil Medium)*



**UNIT-7**

**HISTORY OF TAMIL NADU UPTO 13th CENTURY**

*Your Success is Our Goal...*

**SERVICES AVAILABLE FOR PG TRB EXAM**

- Material for All 10 Units
- E-Book for Psychology & Education Methodology
- E-Book for GK
- Online Recorded Video Classes
- Online Test
- Question Bank
- Regular Classes

tcaexamguide

Teacher's Care Academy

www.tcaexamguide.com

tcaexamguide@gmail.com

# வரலாறு

## 13ம் நூற்றாண்டு வரையிலான தமிழ்நாட்டின் வரலாறு

## HISTORY OF TAMILNADU UPTO 13TH CENTURY

# PG TRB (2025-2026)

## அலகு - 7

## FIRST EDITION

**TEACHER'S CARE PUBLICATION**

38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502

Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

Branch Office : 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy (76399 67359)

Branch Office: Advaitha Ashram Road, New Bus Stand, Salem (93602 68118)

# INDEX


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | PG TRB PREVIOUS YEAR QUESTION - 2022 | VII |
| | PG TRB PREVIOUS YEAR QUESTION - 2019 | VIII |
| | PG TRB PREVIOUS YEAR QUESTION - 2017 | IX |
| | PG TRB PREVIOUS YEAR QUESTION – 2014-15 | XI |
| | PG TRB PREVIOUS YEAR QUESTION - 2012 | XII |
| 7.1. | **தமிழ் நாட்டின் புவியியல் அம்சங்கள் (Geographical features of Tamil Nadu)** | 1 |
| | 7.1.1. தமிழ் நாட்டின் புவியியல் கூறுகள் | 2 |
| | 7.1.2 சேர நாடு | 3 |
| | 7.1.3. சோழ நாடு | 4 |
| | 7.1.4. இட விவரம் | 5 |
| | 7.1.5. மேற்கு கிழக்கு மலைத் தொடர்கள் | 5 |
| | 7.1.6. மாதிரி வினாக்கள் | 10 |
| 7.2. | **தமிழக வரலாற்றின் ஆதாரங்கள் (Sources of the History of TamilNadu)** | 13 |
| | 7.2.1. தொல்பொருள் சான்றுகள் (அ) ஆதாரங்கள் மூன்று வகைகள் அவை | 13 |
| | 7.2.1.1. அசோகருடைய கல்வெட்டுக்கள் | |
| | 7.2.1.2. நாணயவியல் | |
| | 7.2.1.3. நினைவுச் சின்னங்கள் | |
| | 7.2.2. மாதிரி வினாக்கள் | 16 |
| 7.3. | **வரலாற்றுக்கு முந்தைய தமிழகம் (Pre-Historic Tamilagam)** | 19 |
| | 7.3.1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (ம) தொடக்க காலம் | 19 |
| | 7.3.2. தமிழ் பிராமி கல்வெட்டுகள் | 23 |
| | 7.3.3 நடுகற்கள் | 23 |
| | 7.3.4. கல்வெட்டுக்கள் | 24 |
| | 7.3.5. தொல்லியல் அகழாய்வுக் களங்கள் | 24 |
| | 7.3.6. நாணயங்கள் | 25 |

| | | |
|---|---|---|
| | 7.3.7. தமிழ் அல்லாத பிற மொழிச் சான்றுகளும் வெளிநாட்டினரும் குறிப்புகளும் | 26 |
| | 7.3.8. பண்டைய தமிழ் நாகரிகம் | 28 |
| | 7.3.9 தமிழர்களின் தோற்றம் | 28 |
| | 7.3.10. தொன்மையை வெளிப்படுத்தும் சான்றுகள் | 29 |
| | 7.3.11. இலக்கியச் சான்றுகள் | 29 |
| | 7.3.12. தமிழ் அல்லாத இலக்கியங்கள் | 30 |
| | 7.3.13. மாதிரி வினாக்கள் | 31 |
| **7.4.** | **சங்க காலம்- மூன்று பண்டைய இராச்சியங்கள் (Sangam Age-Three Ancient Kingdom)** | **33** |
| | 7.4.1. சங்க காலம் | 33 |
| | 7.4.2. சேரன் செங்குட்டுவன் (Cheran Sengutuvan) | 36 |
| | 7.4.3. கரிகால சோழன் (Karikala Chola) | 38 |
| | 7.4.4. பாண்டிய நெடுஞ்செழியன் (Pandya Nedunchelian) | 39 |
| | 7.4.5. சமூகம் மற்றும் பொருளாதார நிலை (Socio -Economic condition) | 43 |
| | 7.4.5.1. சமூகம் | |
| | 7.4.5.2. பெண்கள் | |
| | 7.4.5.3. சமூக பொருளாதார நிலை | |
| | 7.4.5.4. கல்வி | |
| | 7.4.5.5. பெண்கள் | |
| | 7.4.5.6. பிற்கால சோழர்கள் காலத்தில் அரச குடும்பப் பெண்களின் பங்களிப்பு | |
| | 7.4.5.7. சோழர் கால நிலங்களை 3 வகயாக பிரிக்கலாம் | |
| | 7.4.6. ஐந்து மடங்கு பிரிவு- நிர்வாகம் (Five fold division) | 51 |
| | 7.4.6.1. நிர்வாகம் | |
| | 7.4.6.2. நிதியிம் சட்டமும் | |
| | 7.4.6.3. படை | |
| | 7.4.6.4. வருவாய் (ம) நிதித் துறை | |
| | 7.4.6.5. வருவாய் (ம) செலவினங்கள் | |

| | | |
|---|---|---|
| | 7.4.6.6. நாணயங்கள் | |
| | 7.4.6.7. சோழர் காலத்தில் அவைகளிம் மதிப்புகள் | |
| | 7.4.7. வர்த்தகம் மற்றும் வணிகம் (Trade and commerce) | 56 |
| | 7.4.7.1. சங்க கால அரசியல் | |
| | 7.4.8. அரசியல் மற்றும் இலக்கியங்கள் | 58 |
| | 7.4.8.1. சங்க கால அரசியல் மற்றும் இலக்கியங்கள் | |
| | 7.4.8.2. பாண்டியர்கள் | |
| | 7.4.9. மாதிரி வினாக்கள் | 66 |
| **7.5.** | **களப்பிரர்கள் (Kalabharas)** | **69** |
| | 7.5.1. களப்பிரர்கள் | 69 |
| | 7.5.2. களப்பிரர்களின் தோற்றம் | 69 |
| | 7.5.3. தமிழகத்தில் களப்பிரர் ஆட்சியின் விளைவுகள் | 71 |
| | 7.5.4. மாதிரி வினாக்கள் | 71 |
| **7.6.** | **காஞ்சியின் பல்லவர்கள் (Pallavas of Kanchi)** | **73** |
| | 7.6.1. பல்லவர்கள் | 73 |
| | 7.6.2. பல்லவர்களின் தாயகம் | 73 |
| | 7.6.3. முற்காலப் பல்லவர்களின் | 74 |
| | 7.6.4. பிற்காலப் பல்லவர்களின் | 75 |
| | 7.6.4.1. தோற்றம் | |
| | 7.6.4.2. முதலாம் மகேந்திரவர்மன் கி.பி.600-630 | |
| | 7.6.4.3. முதலாம் நரசிம்மவர்மன் கி.பி. 630-655 | |
| | 7.6.4.4. இரண்டாம் மகேந்திரவர்மன்(655-60) | |
| | 7.6.4.5. முதலாம் பரமேஸ்வரன் (660-80) | |
| | 7.6.4.6. இரண்டாம் நரசிம்மவர்மன் கி.பி.680-700 | |
| | 7.6.4.7. தண்டிவர்மன் (கி.பி.755-826) | |
| | 7.6.4.8. மூன்றாம் நந்திவர்மன் (கி.பி.826-849) | |
| | 7.6.4.9. நிருபதுங்கன் (ம) அபராஜிதன் (கி.பி849-875) | |
| | 7.6.5. பல்லவ சாளுக்கிய மோதல் (Pallava Chalukya Conflict) | 81 |
| | 7.6.6. ஆட்சிமுறை- சமூக பொருளாதார நிலை | 85 |

| | | |
|---|---|---|
| | 7.6.6.1. பல்லவர் கால ஆட்சிமுறை (ம) சமூக பொருளாதார நிலை | |
| | 7.6.7. கலை மற்றும் கட்டிடக்கலை (Art and Architecture) | 88 |
| | 7.6.8. சமூக பொருளாதார நிலை | 93 |
| | 7.6.8.1. சமூக நிலை | |
| | 7.6.8.2. பெண்களின் நிலை | |
| | 7.6.8.3. உணவு முறை | |
| | 7.6.8.4. பொருளாதார நிலை | |
| | 7.6.8.5. பல்லவர் கால போக்குவரத்து முறை | |
| | 7.6.8.6. நிலமானியங்கள் | |
| | 7.6.8.7. ஏரி பாசனம் | |
| | 7.6.8.8. வருவாயும் வரிவிதிப்பும் | |
| | 7.6.8.9. பல்லவப் படைகள் | |
| | 7.6.8.10. கடல்வழி வாணியம் | |
| | 7.6.9. பக்தி இயக்கமும் இலக்கியமும் | 102 |
| | 7.6.10. மாதிரி வினாக்கள் | 111 |
| **7.7.** | **சோழ ஏகாதிபத்தியம் (Imperial Cholas)** | **114** |
| | 7.7.1. விஜலாயன் சோழன் முதல் முதலாம் குலோத்துங்கன் வரை | 114 |
| | 7.7.2. தஞ்சைச் சோழர்கள்<br>1) விஜயாலய சோழன் கி.பி.(850-871)<br>2) முதலாம் ஆதித்தியன் (கி.பி.871-907)<br>3) முதலாம் பராந்தக சோழன் (கி.பி.907-955)<br>4) கண்டராதித்யா (கி.பி.950-957)<br>5) அரிஞ்சயன் (கி.பி. 956-957)<br>6) இரண்டாம் பராந்தகன் (சுந்தர சோழன் கி.பி.957-973)<br>7) உத்தமச் சோழன் (கி.பி.973-985)<br>8) மகா இராஜராஜ சோழன் (கி.பி.985-1014)<br>9) முதலாம் இராஜேந்திரன் கி.பி1012-1044<br>10) இராஜேந்திரனின் பட்டப்பெயர்கள்:- | 114 |

| | | |
|---|---|---|
| | 11) முதலாம் இராஜாதிராஜன் (கி.பி.1044-1054)<br>12) இரண்டாம் இராஜாதிராஜன் (கி.பி. 1054-1063)<br>13) வீரராஜேந்திரன் (கி.பி.1063-1069)<br>14) அதி ராஜேந்திரன் (கி.பி.1067-1070) | |
| | 7.7.3. சாளுக்கிய சோழர்கள் | 123 |
| | 7.7.4. நிர்வாகம் (Admininstration) | 123 |
| | 7.7.4.1. சோழர் நிர்வாகம்- அரசர் | |
| | 7.7.4.2. மண்டலங்கள் | |
| | 7.7.4.3. உள்ளாட்சி அமைப்பு | |
| | 7.7.4.4. ஊரார் | |
| | 7.7.4.5. சபையார் | |
| | 7.7.4.6. நகரத்தார் | |
| | 7.7.4.7. நாட்டார் | |
| | 7.7.4.8. உத்திரமேரூர் கல்வெட்டுகள் | |
| | 7.7.5. குடவோலை முறை / அமைப்பு (Kudavolai system) | 130 |
| | 7.7.6. கடல்சார் நடவடிக்கைகள் (Maritime Activities) | 133 |
| | 7.7.7. கலை மற்றும் கட்டிடக்கலை (Art and Architecture) | 134 |
| | 7.7.8. மாதிரி வினாக்கள் | 137 |
| **7.8.** | **பிற்கால பாண்டியர்கள் (Later Pandyas)** | **141** |
| | 7.8.1. பாண்டியர்கள் | 141 |
| | 7.8.2. சங்க கால பாண்டியர்கள் (முற்கால பாண்டியர்கள்) | 141 |
| | 7.8.3. பிற்காலப் பாண்டியர்( மானூர் கல்வெட்டு – உள்ளாட்சி முறை பற்றி அறிய)<br>➢ **முதல் பாண்டியப் பேரரசு**<br>➢ கடுங்கோன் (கி.பி. 590-620)<br>➢ அரிகேசரி மாறவர்மன் (கி.பி. 670-710)<br>➢ கோச்சடையன் (கி.பி. 700-730)<br>➢ மாறவர்மன் இராஜசிம்மன் (கி.பி. 730-765)<br>➢ ஜடில பராந்தக நெடுஞ்சடையன் (கி.பி.765-815)<br>➢ ஸ்ரீமாற ஸ்ரீவல்லவன் (கி.பி. 815-862)<br>➢ இரண்டாம் வரகுணன் (கி.பி. 862-885) | 145 |

| | | |
|---|---|---|
| | ➢ வீர நாராயணன் (கி.பி. 885-900)<br>➢ இரண்டாம் இராஜசிம்மன் (கி.பி. 900-920)<br>➢ வீர பாண்டியன்<br>➢ **இரண்டாம் பாண்டியப் பேரரசு**<br>➢ முதலாம் ஜடாவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி. 1190-1216)<br>➢ முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1216-1238)<br>➢ இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1238-1251)<br>➢ முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251-1268)<br>➢ முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1268-1311) | |
| | 7.8.4. மார்கோ போலோவின் சான்றுகள் (Accounts of Marco Polo) | 150 |
| | 7.8.5. அரசியல் மற்றும் நிர்வாகம் | 151 |
| | 7.8.6. கலை மற்றும் கட்டிடக்கலை (Art and Architecture) | 154 |
| | 7.8.7. மாதிரி வினாக்கள் | 155 |
| **7.9.** | **கூடுதல் மதிப்பெண் பெட்டகம்** | **158** |
| **7.10.** | **முக்கிய வினாக்கள்** | **193** |



TEACHER'S CARE ACADEMY KANCHIPURAM

TCA APP DOWNLOAD - செய்து விடைகளை காணவும்

TCA

## PREVIOUS YEAR QUESTION PAPER- 2022

**1. சங்க காலத்தில் காடுகளை திருத்தி, விளை நிலைத்தையும், நிலையான நீர்ப்பாசன வசதிகளையும், ஏற்படுத்திய புகழ்மிக்க சோழ மன்னர்**

(A) ராஜேந்திர சோழன் - I (B) குலோத்துங்க சோழன்

(C) ராஜ ராஜ சோழன் (D) கரிகாலச் சோழன்

**2. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகத்து" இந்த வரிகள் எந்த தமிழ் இலக்கிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?**

(A) மணிமேகலை (B) சிலப்பதிகாரம் (C) திருக்குறள் (D) தொல்காப்பியம்

**3. தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என அழைக்கப்பட்ட காலம் எது?**

(A) சங்க காலம் (B) பல்லவர் (C) சோழர் (D) பாண்டியர்

**4. மலபாரில் கடற்படை மூலம் தனது எதிரியை வெற்றி கண்ட உதயஞ்சேரலின் மகனின் பெயர் என்ன?**

(A) நெடுஞ்சேரலாதன் (B) சேரன் செங்குட்டுவன்

(C) கரிகாலன் (D) ஆதித்யா சோழா

95665 35080

**5. ராஜசிம்மனது அரசவையில் இருந்த வடமொழி அறிஞரின் பெயர் என்ன?**

(A) தண்டின் (B) ரங்கபதக்கா (C) அப்பர் (D) ஸ்ரீபாரா

**6. கங்கைக் கொண்ட சோழன் என்ற புகழ்மிகு பெயரால் அறியப்படுகிற சோழ அரசர் .........**

(A) வஜயாலய சோழன் (B) கண்டராதித்த சோழன்

(C) பராந்தக சோழன் (D) முதலாம் ராஜேந்திர சோழன்

**7. தென்னிந்தியாவில் முக்கியத்துவம் பெற்ற தக்கோலப் போர், யார் யாருக்கிடையே நடைபெற்றது?**

(A) சோழர்கள் மற்றும் பாண்டியர்கள் (B) சோழர்கள் மற்றும் ஹொய்சாளர்கள்

(C) சோழர்கள் மற்றும் ராஷ்டிரக்கூடர்கள் (D) சோழர்கள் மற்றும் சாளுக்கியர்கள்

**8. உத்திரமேரூர் கல்வெட்டுகளின்படி கிராமம் எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது?**

(A) 18 (B) 24 (C) 30 (D) 36

**9. சிதம்பரம் நடராசர் கோயில் விமானத்திற்கு தங்க பொற்கூறையை யார் அமைத்து கொடுத்தார்?**

(A) முதலாம் பராந்தகன் (B) முதலாம் இராஜராஜன்

(C) விஜயாலயன் (D) முதலாம் இராஜேந்திரன்

**10. கோ பரகேசரி அல்லது கோ ராஜ கேசரி என்ற பட்டத்தினை கொண்ட அரசர்கள்**

(A) சேரர்கள் (B) பாண்டியர்கள் (C) பல்லவர்கள் (D) சோழர்கள்

**TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM**

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018.**

**B.Off 3:266-C, Advaitha Ashram Road,(Opp to New Bus Stand), Salem-636 004.**

**Trichy: 76399 67359 Salem: 93602 68118**

# PG -TRB HISTORY 2025-26

## UNIT - VII


**13ம் நூற்றாண்டு வரையிலான தமிழ்நாட்டின் வரலாறு**

## 7.1. தமிழ் நாட்டின் புவியியல் அம்சங்கள் (Geographical Features of TamilNadu)

**தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பகுதி தமிழகம் என்றழைக்கப்பட்டது.**

- தெற்கே - இந்தியப் பெருங்கடலும்
- கிழக்கில - வங்காள விரிகுடாவும்
- மேற்கில் - அரபிக்கடலும்
- வடக்கி - வேங்கடமலையும் (இவையனைத்தும் - தமிழகத்தின் எல்லையாக அமைந்துள்ளது.

95665 35080



### 7.1.1 தமிழ் நாட்டின் புவியியல் கூறுகள்:-

- மனித வாழ்வினை உருவாக்கும் பணியில் மேற்கூறிய புறமாறுதல்களுக்கான காரணிகள் ஒவ்வொன்றின் பங்கும் நாட்டிற்கு நாடு மாறுபடுகிறது. ஆனால் ஒரு நாட்டின் அங்கு வாழும் மனிதர்களின் வரலாறுகள் உறுதியாக நிலவியலமைப்பினாலேயே பெரிதும் நடத்திச் செல்லப்படுகின்றன.

- தமிழர்கள் வாழும் தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்தின் தென் கோடியில் அமைந்துள்ளது. தமிழகம் 15 டிகிரி வட அட்சரேகைக்குத் தெற்கில் அமைந்துள்ளது. நக்கீரர் தன் இறையனார் அகப்பொருள் என்னும் நூலில், முதற்சங்க காலத்தில் தமிழகம் இப்போதிருப்பதைவிடத் தெற்கிலும், கிழக்கிலும் விரிந்திருந்ததகாவும் 49 முக்கிய பிரிவுகளைக் கொண்டிருந்ததாகவும் கூறுகிறார்.

- மண்ணியல் விற்பன்னர்களும் (Geologists) மானிட வளர்ச்சிச் சரித்திர வல்லுநர்களும் (Anthropologists) தென் கோடியிலிருந்த இந்திய நிலப்பரப்பு குமரிக் கண்டம் (அ) லெமூரியா என்றழைக்கப்பட்டதாகவும், அந்நிலப்பரப்பு நெடுங்காலத்திற்கு முன்பே இந்துப் பெருங்கடலால் கடல் கோட்பட்டதாகவும் கூறுவர்.

- மூன்றாம் தமிழ்ச் சங்கக் காலத்துத் தமிழக வட, தென் எல்லைகள் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகு" என்னும் கூற்றால் விளங்கும்.

- வடகிழக்கில் - வேங்கடமலையும், வடக்கிலும், வடமேற்கிலும் - மைசூர் பீடபூமியும் அமைந்துள்ளது.

- தமிழர்கள் தமிழகத்தைக் குடபுலம், குணபுலம், தென்புலம் என பிரித்திருந்தனர், வேங்கடப் பிரதேசம் கடக்க முடியாத காடுகளால் அமைந்திருந்தது. மூந்நீரின் இணைப்பைப் புலப்படுத்துவதாகக் கன்னியாகுமரியில் மூன்று கடல்களும் சந்திக்கின்றன. இது ஒரு புனித யாத்திரைத் தலமாகும்.

- வேங்கட மலைக்கு வடபுறம் வாழ்ந்த மக்கள் **"படுகர்"** என அழைக்கப்பட்டனர். மலைத் தொடரை அடுத்தத் தமிழகத்தையொட்டிய வடபுலத்தில் எருமை நாடு இருந்தது. எருமை நாட்டிற்கு மேற்கில் துளு நாடு, குடநாடு, கொங்கணம் ஆகியவை இருந்தன. தீபகற்ப இந்தியாவின் தென்கிழக்கில் ஹீலங்கா (இலங்கை) அமைந்துள்ளது.

- இந்தியாவிற்கும் - இலங்கைக்கும் இடையில் காணப்பட்ட மணி பல்லவத் தீவு காவிரிக் கரையிலமைந்திருந்த **தொன்மை மிகு புகார் துறைமுகத்திலிருந்து** 30 யோசனைத் தொலைவில் இருந்ததாக கூறப்படுகிறது.

TCA

- கொற்கையிலிருந்து ஜாவாவிற்குச் சென்ற கப்பல்கள் மணிப்பல்லவத்தீவின் வழியே சென்றதாகத் தெரிகிறது. நிர்வாண (காட்டு மிராண்டி) நாகர்கள் வாழ்ந்து வந்த தீவுகள் இலங்கைக்குக் கிழக்கே அமைந்திருந்தன.

- கி.பி. 9ம் நூற்றாண்டிற்குப் பின் பண்டைத் தமிழகம், தமிழ்நாடு கேரளா என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

- தமிழகம் 12 நாடுகள் (அ) மாநிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது அவை முறையே பாண்டிநாடு, கிட்டநாடு, குடநாடு, கற்கா நாடு, வேணாடு, பூளிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, வடஅருவாநாடு, சீதநாடு, மல்நாடு, புனல்நாடு என்பவையாகும். இவை பன்னிரண்டும் பாண்டியநாடு, சேரநாடு, சோழநாடு, தொண்டைநாடு, சொங்குநாடு, வேளிர் நாடு என்ற பெரும்பிரிவுகளுக்குள் அடங்கும்.
- காவிரிக்குத் தெற்கிலுள்ள இக்காலத்து மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங்கள் அடங்கிய நிலப்பரப்பே அக்காலத்துப் பாண்டிய நாடு என அழைக்கப்பட்டது. இது வெள்ளார் நதிக்குத் தெற்கிலும் கன்னியாகுமரிக்கு வடக்கிலும், பெருவேலிக்கு கிழக்கிலும், வங்காள விரிகுடாவிற்கு மேற்கிலும் அமைந்துள்ளது.
- இது பல கூற்றங்கள் எனப்படும் உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இங்கு செந்தமிழ் பேசப்பட்டு வந்தது. இதன் தலைநகராகவும் சிறந்த உள்நாட்டு பட்டிணமாகவும் மதுரை விளங்கிற்று. இது வைகை நதிக்கரையில் அமைந்துள்ளது. இது கோபுரம் சார்ந்த கோட்டைகளால் சூழப்பட்ட ஒரு நகரம். எனவே இது **"நான் மாடக் கூடல்"** என்றும் அழைக்கப்பட்டது. வடஇந்தியாவின் மதுரா என்னும் நகரிலிருந்து இவ்வூரை வேறுபடுத்திக் காட்ட தமிழ்புலவர்கள் இவ்வூரைத் **"தென் மதுரை"** (அ) தெக்கண மதுரை என்றும் அழைத்தனர். தாமிரபரணி முகத்துவாரத்தில் அமைந்திருந்த கொற்கை இந்நாட்டின் துறைமுகமாகும்.
  - ✓ கொற்கை மக்களின் முக்கிய தொழில் - முத்துக்குளித்தல்
  - ✓ இதர துறைமுகங்கள் - விளினம், சாலியூர்.

## 7.1.2 சேர நாடு:-

- இக்கால கேரளமும் தமிழகத்தின் கோயம்புத்தூர் மாவட்ட முழுவதும் சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியும் கொண்ட நிலப்பரப்பே அக்காலச் சேர நாடாகும்.
- இந்நாடு 12 உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது.
  - ✓ இது வடக்கில் - பழனிமலைகளாலும்
  - ✓ கிழக்கில் - திருச்செங்கோடாலும்

TCA

- மேற்கில் தெற்கிலும் கடலாலும் சூழப்பட்டிருந்தன. இந்நாட்டின் தலைநகர் பேரியாற்றின் கரையிலுள்ள திருவஞ்சைக்களம் (எ) வஞ்சி. இந்நகரம் வலுவான கோட்டைகளால் பாதுகாக்கப்பட்டது.

**தலைநகரில் அமைந்துள்ள முக்கிய கட்டிடங்கள்**

- ஒரு விஷ்ணு கோயில், ஒரு புத்த விஹாரகம், ஒரு (நிகரத்த) சமண மடாலயம்.
- பேரியாற்றின் முகத்துவாரத்திற்கருகில் **முசிறி** எனப்படும் துறைமுகம் இருந்தது. மேற்கு கரையில் அமைந்திருந்த துறைமுகம் **தொண்டி** ஆகும்.

### 7.1.3 சோழ நாடு

- பன்றி நாட்டுக்கப்பால் புனல்நாடு என அழைக்கப்படும் சோழ நாடு அமைந்திருந்தது. புனல் நாடு என்னும் சொல் நீரினைக் குறிக்கும். இது கோடிக்கரைக்குக் கிழக்கிலும், கடலுக்கு மேற்கிலும், வெள்ளாற்றிக்கு வடக்கிலும் அமைந்திருந்தது.
- சோழர் தலைநகர் - உறையூர் ஆகும். இது காவிரியின் தென் கரையில் அமைந்திருந்தது. காவிரியின் முகத்துவாரத்தில் அமைந்திருந்த புகார் (காவிரி பூம்பட்டினம்) சிறந்த ஏற்றுமதி வணிக தளமாகும். புகார், மருவூர்ப்பாக்கம், பட்டிணப்பாக்கம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தலைநகரில் பல பெரிய கட்டிடங்கள் காணப்பட்டன.

**தொண்டை மண்டலம்:-**

- பவள மலைக்கு கிழக்கிலும், வேங்கடமலைக்குத் தெற்கிலும் உவரிக்கு மேற்கிலும் அமைந்திருந்த நிலப்பரப்பு தொண்டை நாடாகும்.
- இதன் தலைநகர் - காஞ்சிபுரம். இது திரையர்களால் ஆளப்பட்டது. பின்னர் பல்லவர்கள் இப்பகுதியை கைப்பற்றினர். படிப்படியாகச் சோழ நாடு முழுவதிலும் தம் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர்.

**கொங்கு நாடு:-**

- ✓ வடக்கில் - தலைமலையாலும்
- ✓ தெற்கில் - வைகாபூர் (அ) பழனிமலையாலும்
- ✓ மேற்கில் - வெள்ளியங்கிரியாலும்

95665 35080

- சூழப்பட்டுள்ள நிலப்பரப்பே கொங்குநாடு ஆகும். இந்நாடு இக்காலக் கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதும், சேலம் மாவட்டத்தின் தென்பகுதியும் கொண்டதாக இருந்தது.
- வேளிர் எனப்படும் சிற்றரசர்கள் 7 பேரும் தனக்கென ராஜ்ஜியங்களை தனித்தனியாக கொண்டிருந்தனர்.

1. பறம்பு நாடு, 2. தகடூர், 3. கோவிலூர், 4. ஆயக்குடி, 5. நாஞ்சில் நாடு, 6. மோகூர், 7. குதிரை மலை, 8. செங்கண்மா, 9. மிழமை என்பன குறிப்பிடத்தக்க வேளிர் தவிர்த்த வேறு சில சிற்றரசுகள் ஆகும்.

- காலத்தால் மூத்த தமிழ் நூலாம், தொல்காப்பியத்தில் தமிழர் வாழ்ந்த நிலப்பகுதிகளை நிலவியல் அடிப்படையில் 4 வகை நிலங்களாகப் பிரித்தனர். பூமியை நானிலம் எனவும் கூறுவர்.

1) குறிஞ்சி - மலையும் மலைச் சார்ந்த இடமும்.
2) முல்லை - காடும் காடுசார்ந்த இடமும்.
3) மருதம் - நிலமும் நிலம் சார்ந்த இடமும்.
4) நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்.
5) பாலை - நீர் வறண்ட முப்புதர்கள் நிறைந்த மணற் பகுதியாகும்.

## 7.1.4 இட விவரம் (Topography)

- அரபிக்கடலுக்கும், வங்காள விரிகுடாவிற்கும் இடைப்பட்டிருக்கும் இத்தீபகற்ப நாடு தென்புறம் குறுகி, கன்னியாகுமரி முனையில் முடிகின்றது.
- குமரி முனையிலிருந்து மேற்றிசையில் வடக்க நோக்கிச் செல்கின்ற மலையாளக் கடற்கரை மற்றும் கொங்கணக் கடற்கரையும் கீழ்த்திசையில் வடக்கு நோக்கிச் செல்கின்ற சோழமண்டலக் கடற்கரையும் தமிழகத்தின் விளிம்புகளாக அணி செய்கின்றன. இதன் இரு கரைகளிலும் துறைமுகங்கள் அழகு சேர்த்தன. இவை ஆழமானவை சீனாவையும் மத்திய தரைக்கடல் நாடுகளையும் சேர்க்கும் கடல் வழியில் ஏறத்தாழ நடுநாயகமாக அமைந்துள்ள தமிழகத்தின் அமைவிடம் அது. அது கிழக்கு, மேற்கு நாடுகளுடன் விறுவிறுப்பான கடல் வாணிபத்தில் ஈடுபடப் பெரிதும் துணையாக இருந்தது.
    - ✓ கிழக்கு கடற்கரையில் - காவிரிப் பூம்பட்டிணம், கொற்கை .
    - ✓ மேற்குக் கடற்கரையில் - தொண்டி, முசிறி
- அக்காலத்து நாட்டுக் கப்பல்கள் மட்டுமே வந்து தங்குவதற்கு ஏற்றவையாக அவை இருந்தன.

TCA

## 7.1.5. மேற்கு கிழக்கு மலைத் தொடர்கள்:-

- கிழக்கு, மேற்கு மலைத் தொடர்கள் தீபகற்பத் தமிழகத்தில் முறையே கிழக்கு, மேற்குக் கடற்கரைகளுக்கு இணையாகச் செல்லுகின்றன. காசர்கோட்டில் தொடங்கி, ஆரம்பொழியில் முடிவுறும் மேற்கு மலைத் தொடர்கள் தமிழகத்தின் இயற்கை அரணாக பிரம்மாண்டமான கடல் தடுப்புச் சுவராக அமைந்துள்ளது.
- நெடிதுயர்ந்த, கரடுமுரடான மலைத் தொகுப்பான வடக்கில் கடல்மட்டத்திலிருந்து 2000 அடி வரை உயர்ந்துள்ளன. கொங்கு நாட்டு நீலகிரியில் இருமலைத்தொடர்களும் சந்திக்கின்றன. நீலகிரி மலைகளின் ஆண்டு மழைப்பொழிவு அதிகம். இது பல்வகைத் தாவரங்களுக்கும் வனப்புமிகு இயற்கைக் காட்சிகளுக்கும் பெயர் பெற்ற தலமாகும். இவ்விரு மலைத் தொடர்களுக்கும் இடையில், தொண்மைமிகு நாகரீகத் தொட்டில்களான பரந்த தாழ் நிலங்கள் அமைந்துள்ளன.
- மேற்கு மலைத் தொடரில் பல கணவாய்கள் அமைந்துள்ளன. 24 மைல் அகலமுள்ள பாலக்காட்டு கணவாய் மிக அகன்ற ஒன்று இக்கணவாய் கன்னடத்திற்கும், மலபாருக்குமான நெருங்கிய தொடர்பிற்கு வழிவகுத்து.
- கொச்சி, கள்ளிக்கோட்டை போன்ற மேற்குக்கரை நகரங்களிலிருந்து கன்னடத்திற்கும் இதர உள்நாட்டு நகரங்களுக்குமான எளிதான பாதையாகி வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது. பாலக்காட்டுக் கணவாய் இவ்வாறு சற்று ஆபத்து நிறைந்த பாதையாக இருந்ததால், கேரளத்திற்கும், கிழக்கிலுள்ள அண்மை நாடுகளுக்குமான சிறந்த தொடர்பு வழியாகச் செங்கோட்டை, ஆரல்மொழிகணவாய்கள் பயன்படுத்தப்பட்டன.

TEACHER'S CARE ACADEMY TCA KANCHIPURAM 95665 35080

- ஆரல்மொழி, செங்கோட்டை கணவாய்களின் மூலம் ஏற்பட்ட படையெடுப்புகளும் நுழைவுகளும் கணக்கிலடங்காதவையாகும். ஆரல்மொழி கேரளத்தின் **"போர்க்களமாகச்"** செயல்பட்டது என்றே கூறலாம்.
- இம்மலைத் தொடரின் தென்புலத்தில் காணப்படும் மலைகளில் பழனி கொடைக்கானல், சேர்வாரயன், பொதிகை, ஆணை மலைகள் குறிப்பிடத்தக்கவை. ஆணை மலையிலுள்ள சில சிகரங்கள் சுமார் **8000 அடி** வரை உயர்ந்துள்ளன.
- அடர்ந்த காடுகளில் காணப்படும் தாவரங்களில் விலை மதிப்புள்ள தேக்கு, சந்தனம், மூங்கில் முதலியவை குறிப்பிடத்தக்கவை. மேலும் காப்பி, தோயிலை, ஏலம், மிளகு போன்ற மலைத் தோட்ட பயிர்களும் இங்கு விளைவிக்கின்றன. காடர், இருளர், புலையர் போன்ற பழங்குடியின மக்களின் உறைவிடங்களாக உள்ளன.
- கிழக்குத் தொடர்ச்சிமலை, மேற்குத்தொடர்ச்சி மலைகளைப் போல நேரானதும், தொடர்ச்சியானதும் அல்ல இவை இடையிலேயே பிளவுபட்டு, சிதறுண்டு காணப்படுகின்றன. அன்றியும் மேற்கு மலைத் தொடரை விடச் சற்றுத் தாழ்வானவை.
- மண்ணியலடிப்படையில் மேற்கு மலைத் தொடரைவிட கிழக்கு மலைத்தொடர் காலத்தால் முந்தியது. ஆனால் விளைபொருட்களிலும் இவ்விரண்டு மலைதொடர்களும் மாறுப்பட்டவை.
- கிழக்கு மலைத்தொடர் பிளவுண்டு சிதறிக் கிடக்கின்ற ஒரு மலைத் தொடர்பு எனலாம். ஒரிஸ்ஸாவில் தொடங்கி, கிழக்குக் கரைக்கு இணையாகச் செல்லும் இம்மலைத் தொடர் சென்னையை அடுத்துத் தென்மேற்காகத் திரும்பித் தக்காணப் பீடபூமியின் தெற்கு விளிம்பாக அமைகிறது.
- பழனிமலை, சேலம் மாவடத்திலுள்ள சேர்வராயன் மலைகள் போன்றவை தனித்து நிற்கும் மலைகள் இவை பிரதான மலைத் தொடரிலிருந்து பிரிந்து செல்கின்றன. தமிழகத்தில் பாயும் ஆறுகளில் பெரும்பாலாவை மேற்கு மலையில் தோன்றி கிழக்கு மலைத் தொடரை ஊடறுத்துக் கொண்டு வங்காள விரிகுடாவில் கலக்கின்றது. எனவே இப்பிளவுகள் கிழக்குக்கரைச் சமவெளிக்கும் தக்காணப்பீடபூமிப் பகுதிக்குமான போக்குவரத்தினை எளிதாக்குகின்றன.
- பண்டைய தமிழகம் வடிவில் அமைந்துள்ளது அதன் முனை தெற்குநோக்கி நீண்டிருந்தது. இரு மலைத் தொடர்களும் நீலகிரி மலைவரை தமிழகத்தின் இரு விளிம்புகளையும் இணைப்பதாக அமைந்துள்ளது. பண்டையத் தமிழகத்தில் அரசியல் ஒன்றுமையின்மைக்கு இதுவே தலையாய காரணமாகும். இதுவே சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், **திரையர், வேளிர்** போன்ற குறுநில மன்னர்களும் தனக்கெனத் தனிநாடுகளை அமைத்துக் கொள்ள வழிவகுத்தது.
- வலிமையும், திறமையும் மிக்க **கரிகாலன், செங்குட்டுவன், நெடுஞ்செழியன், முதலாம் இராசராசன் முதலாம் இராசேந்திரன்** போன்ற மன்னர்களின் காலத்தில் மட்டுமே தமிழகத்தில் அரசியல் ஒற்றுமையைக் காண முடிகிறது.




தென்னிந்தியா : கி.பி. 850–1200

95665 35080

**நதிகள்:-**

➢ தமிழகம், காவிரி, பாலாறு, வைகை, பெண்ணாறு, வெள்ளாறு, தாமிரபரணி, பரளியாறு, பரதப்புழா, பெரியாறு போன்ற ஆறுகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது. பெரியாறு, பரதப்புழா ஆகிய இரண்டு ஆறுகள் தவிர்த்த எனைய இவ்வாறுகள் மேற்க மலைத் தொடரில் உற்பத்தியாகி தமிழக நிலப்பரப்பில் பாய்ந்து வங்க விரிகுடாவில் கலப்பவை பெரியாறும், பரதப்புழாவும் மேற்கு மலைத்தொடரில் உற்பத்தியாகி கேரள மாநிலத்தில் பாய்ந்து அரபிக் கடலில் கலப்பவை.

➢ தென் கங்கை என அழைக்கப்படும் காவிரியை இளங்கோவடிகளும் இன்னபிற புலவர்களும் போற்றுகின்றனர். 760 கி.மீ நீளமுள்ள காவிரி ஆறு குடகு மலையில் உற்பத்தியாகிறது. புதுமணப் பெண்ணாய் ஆரவாரமின்றி கன்னட மாநிலத்தில் பாய்ந்து நுரை தங்கும் பலனருவியாய்த் தமிழகத்தில் அடியெடுத்து வைக்கின்றது. இடையில் கன்னட மாநிலத்துப் புனித்தலங்களான ஹீரங்கப்ட்டினம், சிவசமுத்திரம் ஆகியவற்றைத் தொடுகிறது. துமிழகத்திலும் *திருச்சிராப்பள்ளிக்கு* மேற்கில் 15 கி.மீ தொலைவில் காவிரி, கொள்ளிடம் என இரு பிரிவகளாகப் பிரிந்து. ஒரு அரங்கத்தைத் தோன்றுவித்து அங்கு அரங்கநாதனைக் கிடந்த நிலையில் காட்சியளிக்கச் செய்கிறது.

➢ பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னர் **கரிகாற்சோழன் காவிரிக்கு கரை எழுப்பி** அதன் வெள்ளச் சேதம் மிகுதியும் குறைக்கப்பட்டது.

➢ அன்றியும் அவன் காவிரிக்குக் குறுக்கே எழுப்பிய கல்லணை, காவிரியின் வெள்ளப்பெருக்கினைக் கட்டுப்படுத்திப் **பாசன வசதிக்கு வகை செய்தது.** இவ்வாற்றுப் பெருக்கால் வாயும் பெறும் சோழ நாட்டைப் புலவர்கள் "**சோணாடு சோறுடைத்து**" எனவும், **தஞ்சை** மாவட்டத்தைத் தமிழகத்தின் **நெற்களஞ்சியம்** எனவும் அழைப்பர்.

➢ மைசூர் மாநிலத்தில் **நந்திதுர்க்கத்தில்** பாலாறு உற்பத்தியாகிறது. இது வட ஆற்காடு, **செங்கல்பட்டு** மாவட்டங்களின் வழியே பாய்ந்து வங்க விரிகுடாவில் கலக்கிறது இவற்றின் கரையில் அமைந்துள்ள முக்கிய நகரங்கள், **வாணியம் பாடி**, வேலூர், ஆற்காடு, செங்கல்பட்டு, வாலாஜாபாத் ஆகியவை ஆகும்.

➢ **பெண்ணாறு** கன்னட மாநிலத்திலுள்ள **சென்ரையான்** பேட்டையில் உற்பத்தியாகிறது. இது பெங்களூர், சேலம் ஆகிய நகரங்களையொட்டிப் பாய்கிறது. கடலூருக்கு வடக்கே கடலோடு கலக்கிறது.

**TCA**

➢ **வைகையாறு,** பழனிமலைகளில் உற்பத்தியாகிறது, மதுரை நகரின் வழியே பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இதன் குறுக்கே கட்டப்பட்டுள்ள வைகை அணை, மதுரை - இராமநாதபுரம் மாவட்டங்களில் குறிப்பிட்ட அளவு நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கிறது.

➢ **மெகஸ்தனீஸின் இண்டிகா** என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள தாமிரபரணி ஆறு மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்கில் அமைந்துள்ள அடர்ந்த காடுகள் சார்ந்த பொதிகை மலையில் உற்பத்தியாகிறது. இது திருநெல்வேலி மாவட்டத்தின் வழியே பாய்கிறது. இது வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இங்குதான் முத்துக் குளித்தலுக்குப் புகழ்பெற்ற **கொற்கை** துறைமுகம் அமைந்திருந்தது.

➢ கேரள மாநிலத்தில் மிக நீளமானது **ஆறு பரதரப்பழா 250 Km** ஆகும். இதன் கரையில் தான் சித்தூார், பாலக்காடு, திருநாவாய், பொன்னானி போன்ற சிறந்த நகரங்கள் எழுந்துள்ளன.

➢ பெரியாறு (234 K.M) வழிபாட்டிற்குரிய பெண் தெய்வமான கொற்றவை கோயில் கெண்டுள்ளதாக கருதப்படும் **ஆயிரை மலையில்** தோன்றுகிறது. இது காலடி, ஆலவாய்

வழியே பாய்கிறது. இதன் கிளை நதிகளில் ஒன்று, சேர மன்னர்களின் தலைநகராக்க கருதப்படும் கொடுங்கோளுர் வழியே பாய்கிறது. தென் திருவாங்கூரில் பாயும் பல ஆறுகளுள் புறளியாறு என்றழைக்கப்படும் பறுளியாறு குறிப்பிடத்தக்க ஒன்று இது மகேந்திரகிரியில் தோன்றி, நாஞ்சில் நாட்டின் வழியே பாய்ந்து, மணக்குடி முகத்துவாரத்தில் கடலோடு கலக்கின்றது. இதன் குறுக்கே பாண்டியன் அணை கட்டப்படுள்ளது.

- தகடூரை ஆண்ட அதியமான நெடுமான் அஞ்சியின் முன்னோர்களுள் ஒருவரே தமிழகத்தில் **முதன்முதலில் கரும்பு விளைவித்தார்** என்ற கருத்து ஔவையாரின் 4 புறநானூற்றுப் பாடல் ஒன்றினால் அறியக் கிடைக்கிறது.
- காவிரி, வைகை, பாலாறு, பெரியாறு போன்ற ஆற்றங்கரைகளில் தான் தமிழகத்தில் தோன்றிய பேரரசுகளில் பல தம் தலைநகர்களைக் கொண்டு விளங்கின.

**மண் வளமும் கனிச் செல்வமும்:-**

TCA

- வளமிக்க வண்டல் மண்ணை ஆறுகளின் கழிமுகப் பகுதிகளிலும், பருத்திப் பயிருக்கேற்ற கரிசல் மண்ணைச் சமவெளி நிலங்களிலும், இறுக்கமான செம்மணணை மத்தியப் பகுதிகளிலும் காணமுடிகிறது.
- கரிசல் மண் வளம் குன்றியது. எனவே பருத்தி இதர புன்செய் தானிய பயறு வகை விவசாயங்கள் இம்மண் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.
- கேரளா, சேலம் மாவட்டத்தில் மின் சக்தியும், நீர்வளமும் சற்று அதிகமாக கிடைக்கிறது சேலத்தில் இருமபுக்கனிமமும், மோனசைட், குரோமைட், குவார்ட்டஸ், பாக்சைட், சுண்ணாம்புகல், டாலமைட் போன்ற கனிமப் பொருட்களும் கிடைக்கின்றன.
- திருச்சிராப்பள்ளியில் ஜிப்சமும், இரும்பு கனிமங்களும் கிடைக்கின்றது.
- பாண்டிசேரி, விருத்தாச்சலம் பகுதிகளின் நீர் வறண்ட பொறுக்குப் பாறைப் பிரதேசங்களில் **லிக்னைட்** என்னும் பழுப்பு நிலக்கரி ஏராளமாகக் கிடைக்கிறது.
- சோடியம், நைட்ரேட் போன்ற இரசாயனப் பொருள்கள் பெறுவதற்குத் தேவையான கனிமவளம் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரை மணற்பரப்பில் மிகுதியாகக் காணப்படுகிறது. பல்லாவரம், தென் ஆற்காடு, திருநெல்வேலி, நாஞ்சில் நாடு போன்ற இடங்களில் பாறைகளில் சிறபங்களை செதுக்கும் கோயில் கலை செழித்திருந்தது.
- சத்திய வீடு, நாகலாபுரம், காஞ்சிபுரம் இவற்றிற்கருகில் கிடைக்கும் மணற்கற்கள் (Sand Stone) கட்டிடங்கள் கட்டவும், கவினுறு வேலைப்பாடுகளுக்கும் பயன்படுகின்றன.
- சங்ககிரி-தூர்க்கம் மலை பகுதிகளிலும், திருநெல்வேலிக்கருகில் தாழையூத்திலும் கிடைக்கும் வெள்ளைச் சுண்ணாம்புக்கற்கள் சிமெண்ட் உற்பத்திக்கும் சலவைத்தூாள் (Bleaching Powder) தயாரிக்கவும் உதவகின்றன.

**மழைப் பொழிவு, நீர்ப்பாசனம் (ம) வேளாண்மை:**

- கேரளா முழுவதிலும் தென்மேற்கு காற்றினால் நல்ல மழையைப் பெறுகின்றன (ஜீன் முதல்

அக்டோபர் வரை) ஆனால் தமிழகம் முழுவதற்கும் நல்ல மழை தருவது வடகிழக்குப் பருவக் காற்றேயாகும் (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) மழைப் பொழிவே நீர் பெறுவதற்கான அடிப்படை ஏதுவாகும்.

- தொல்காப்பியங்காலத்தில் மழைப்பொழிவு அடிப்படையில் தமிழகம் நான்கு பெரும் நிலப்பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தன. ஆனால் **இளங்கோவடிகள்** காலத்தில் இந்நால்வகை **நிலங்களுடன் "பாலை" எனப்படும்** ஐந்தாவது வகை நிலத்தையும் தமிழர் சேர்த்தனர்.
- தமிழகத்திலிருந்து மெசபடோமியாவிற்கு அரிசியும், ரோமபுரிக்கு முத்துக்களும் இதர ஐரோப்பிய நாடுகளுக்கு மரமும், தென்னை நார்க்கயிறும் அனுப்பட்டன.

## 7.1.6. *மாதிரி வினாக்கள்*

**1. மூன்று தொடர்ச்சியான் சங்கங்களின் மிகப்புமையான குறிப்பு காணப்படும் இறையனார்.**

A) 9 வது B) 3வது C) 8 வது D) 5 வது

**2. பின்வருவனவற்றை பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| **(a)** | **வஞ்சி** | **1.** | **காவிரிப்பூம்பட்டினம்** |
| **(b)** | **கூடல்** | **2.** | **கரூர்** |
| **(c)** | **கச்சி** | **3.** | **காஞ்சிபுரம்** |
| **(d)** | **புகார்** | **4.** | **மதுரை** |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 4 | 3 |
| B) | 3 | 1 | 2 | 4 |
| C) | 2 | 4 | 3 | 1 |
| D) | 4 | 2 | 3 | 1 |

TEACHER'S CARE ACADEMY TCA KANCHIPURAM
95665 35080

**3. கேவாத பெருந்தச்சன் என்னும் ஸ்தபதியை குறிப்பிடும் கல்வெட்டு உள்ள ஊர் எது?**

A) மாமல்லபுரம் B) சாளுவங்குப்பம்

C) வயலூர் D) பூஞ்சேரி

**4. ஸ்வஸ்தி ஶ்ரீ என்றால் என்ன?**

A) மங்கல் சொல் B) இணைப்பு சொல்

C) அமங்கல சொல் D) கட்டாயமான சொல்

**5. பொருத்துக**

**(a) புள்ளிமான் கொம்பை 1. தர்மபுரி மாவட்டம்**

**(b) விக்ரமங்காலம் 2. காஞ்சிபுர மாவட்டம்**

**(c) உத்திரமேரூர் 3. மதுரை மாவட்டம்**

**(d) இருளப்பட்டி 4. தேனி மாவட்டம்**

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 1 | 2 | 3 | 4 |
